

தலைமைப் போட்டியால் தடுமாறும் தமிழரசுக் கட்சி

கருணாகரன்

பக்கம் 02

பக்கங்கள்: 13

THEEMPUNAL தீம்புனல்

வாராந்தப் பத்திரிகை

தீ : 03 | புனல்:46 | 09.03.2024 சனிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054



சர்வதேச ரீதியில் சாதனை செய்த பெண்கள்

கந்தசாமி அபிலாஷ்

பக்கம் 04

# ஆதிலிங்கேஸ்வரர் ஆலய சிவராத்திரிக்கு முட்டுக்கட்டை

வெடுக்குநாறி ஆலய பகுதிகளில் தற்போது பொங்கலுக்கான ஏற்படுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் ஆலய வளாகத்தை பொலிஸாரும் தொல்பொருள் திணைக்களத்தினுடைய அதிகாரிகளும் கண்கானித்து வருகின்றனர்.

குறிப்பாக ஆலய வளாகத்திற்குள் இரண்டு தரப்பினரையும் பொலிஸார் அனுமதித்துள்ளதோடு அந் நேரத்தில் முரண்பாடுகள் ஏற்பட்டால் இரண்டு தரப்பினரையும் கைது செய்வோம் என தெரிவித்துள் ளனர்.

ஆலய வளாகத்திற்குள் தண்ணீரை கொண்டுவர பொலிஸார் தடைசெய்துள்ளனர். இதனால் ஆலயத்தில் அன்னதானம் வழங்கும் செயற்பாடுகள் முடங்கியுள்ளதாக தெரிவிக்கப்ப டுகிறது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சிவஞானம் சிறீதரன் மற்றும் வேலன் சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். வெடுக் குநாறிமலை ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுக்கு செல்லும் பக்தர்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பொலிஸார் செயற்பட்டு வருகின்றனர்.

ஆலயத்திற்கு செல்லும் பிரதான வீதியில் பொலிஸார் வீதித்தடுப்புக் களை வைத்துள்ளதால் ஆலயத்தின் வழிபாடுகளுக்கு செல்லும் மக்கள் வாகனம் மூலம் செல்ல முடியாத நிலமை காணப்படுவதோடு நீண்ட தூரம் நடந்து செல்லவேண்டிய நிலை உள்ளது.

மேலும் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் பொருட்கள் பொலிஸாரால் சோதனையிடப்பட்ட பின்னரே அனுமதிக் கப்படுகிறது.

மேலும் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்படும் பொருட் கள் பொலிஸாரால் சோதனையிடப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகிறது.

இதேவேளை பௌத்த பிக்கு தலைமையில் மூன்று வாகனங்களில் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த வர்களும் வருகை தந்துள்ளதாக குறிப்பிடப்படுகி றது.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட ஆலய பூசகர்களை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரு வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி நிகழ்வுகளை நடாத்தலாமென நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள போதும் பொலிஸா ரும், இராணுவத்தினரும் தொடர்ச்சி யாக அங்கு வழிபட வருபவர்களை தடுத்து வருகின்றனர். ■



# தலைமைப் போட்டியால் தடுமாறும் தமிழரசுக் கட்சி

✍ கருணாகரன்

தமிழரசுக் கட்சியின் அதிகாரப் போட்டிகள் சந்திக்கு வந்தது மட்டுமல்ல, அதை நீதிமன்றம் வரையில் கொண்டு வந்து விட்டுள்ளது. 75 ஆண்டுகால வரலாற்றைக் கொண்ட கட்சிக்கு இதெல்லாம் கசப்பான அனுபவம்தான். சோதனைதான். உள்ளே நெடுங்காலமாகச் சீழ்ப்பிடித்துக் குமைந்து கொண்டிருந்த விடயங்கள் இப்பொழுது வெளியே வந்துள்ளன. சீழ்ப்பிடித்திருந்தால் அது என்றாவது வெளியே வந்துதான் தீரும்.

குறுகிய நோக்கங்களும் பதவி ஆசையும் கட்சியைப் பலவீனப்படுத்தியுள்ளன. இது முடிவுக்கு வருவது கடினம். அப்படி இந்தத் துயர நிலை முடிவுக்கு வரவேண்டுமானால் கட்சியின் அரசியல் சிந்தனையும் செயற்பாடும் (உள்ளடக்கம்) மாற்றமடைய வேண்டும். அவ்வாறே அரசியல் பண்பாடும் உருவாக வேண்டும். இது நிகழ்வதற்கான வாய்ப்புகள் எதுவும் தென்படவில்லை.

தற்போதைய சிக்கல்களுக்கு யாப்பு மீறல், ஜனநாயக மறுப்புச் செயற்பாடுகள்தான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் காரணம். தலைவர், செயலாளர் தெரிவுக்குப் பிறகு எழுந்திருந்த சர்ச்சையின்போது இதைச் சுமந்திரன் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார். அதுகூட மென்மையாகத்தான். ஏனென்றால் யாப்புக்கு முரணான முறையிலேயே தலைவர் தெரிவு நடந்தது. இருந்தும் அதில் சுமந்திரனும் ஒரு போட்டியாளராகப் பங்கேற்ற காரணத்தினால் யாப்பைப் பற்றி கடுமையாக விமர்சிப்பதைத் தவிர்த்தார் சுமந்திரன். அப்படி விமர்சித்தால் அதில் தன்னுடைய தவறுகளும் உட்படும் என்பதால் அதைத் தவிர்த்தார். பதிலாக நடந்த தெரிவுகளை தான் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன் என்றும் ஆனால், யாப்பை மீறி எவரும் எதையும் செய்ய முடியாது, செய்யக் கூடாது என்றும் அழுத்தமாகச் சொல்லியிருந்தார்.

அந்த அழுத்தம் இப்பொழுது வேலை செய்கிறது. முதற்கட்ட நீதிமன்ற விசாரணையின் போது தலைவர் தெரிவு உட்பட அனைத்துத் தெரிவுகளையும் மறுபடி நடத்துவதற்கு சிறிதரன் உட்பட முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜா வரை பொறுப்பானவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். முக்கியமாக யாப்பு மீறல்களைப் பகிரங்கமாக ஏற்றுள்ளனர். இனி யாப்பின் பிரகாரம் செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

அப்படியென்றால் நடந்தவை அனைத்தும் தவறு என்று பொருள். இந்தத் தவறுகளை சிறிதரன்-மாவை தரப்பு பகிரங்கமாக ஒத்துக் கொண்டுள்ளது. கட்சிக்குள்ளே இதைச் சுட்டிக்காட்டியபோது அதற்கு மதிப்பளித்து, உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, சீர்ப்படுத்தியிருந்தால் இப்படியான தோல்வி நிலை ஏற்பட்டிருக்காது.

இப்பொழுது சிறிதரன் கொண்டாடிய வெற்றி வடியத் தொடங்கி விட்டது. பதிலாக இதில் முதற்கட்டமாக சுமந்திரன் வெற்றியடைந்துள்ளார்.

அதாவது நீதிமன்றத் தீர்ப்புக்கு முன்னரே சுமந்திரனுக்கு வெற்றி கிடைத்துள்ளது. அவர் வலியுறுத்திய விடயங்களும் வலியுறுத்துவதற்கு விரும்பிய விடயங்களும் நிறைவேறியுள்ளன.

எல்லாவற்றுக்கும் நாம் யாப்பைப் பின்பற்றத் தேவையில்லை என்ற முன்னாள் தலைவர் மாவை சேனாதிராஜாவும் மாவையின் ஆலோசனையைத் தொடர்ந்த சிறிதரன் தரப்பும் தலைகுனிந்துள்ளன.

இப்பொழுது யாப்பு பற்றிய புரிதலும் விழிப்புணர்வும் தமிழரசுக் கட்சியினருக்கும் அதன் அனுதாபிகளுக்கும் கொஞ்சமாவது நிகழ்ந்திருக்கும் என நம்பலாம். ஆகவே, இனிமேல் அவர்கள் இதைக்குறித்து கொஞ்சமாவது எச்சரிக்கையோடு நடந்து கொள்வர். இல்லையென்றால் மேலும் மேலும் நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்.

பொறுப்பற்றதனமாக, எதேச்சதிகாரமாக நடந்து கொண்டிருக்கும் மூத்த தலைவரான மாவை சேனாதிராஜா நீதிமன்றப்படியேறியே இதைப் படிக்க வேண்டிய நிலை வந்தது வரலாற்றின் சோகம் தமிழரசுக் கட்சிக்குள் துலக்கமாக இரு தரப்புகள் (இரு அணிகள்) அதற்குள் உண்டென்று வெளிப்படையாகவே தெரிந்து விட்டது. ஒன்று சிவஞானம் சிறிதரன் - மாவை தரப்பு.

அடுத்தது ஆபிரகாம் சுமந்திரன் தரப்பு.

இது கட்சியின் விசுவாசிகளுக்கு கவலையளிப்பதே. ஆனால், இந்தக் கவலையைப் பொறுப்பானவர்கள் புரிந்து கொள்வதாக இல்லை. இந்தக் கவலை யாழ்ப்பாணத்தில் உள்ள சில ஊடகங்களுக்கும் ஊடகப் பொறுப்பாளிகளுக்கும் உண்டு. அவர்களும் தங்களால் முடிந்தளவுக்குப் பாறைகளை உடைக்க முயற்சித்தனர். அதுவும் உரிய பயனைத் தர வில்லை. சம்மட்டிகள் உடைந்ததுதான் மிச்சம்.



இந்த நிலையில் எதிர்காலத்தில் இந்த இரண்டு அணியும் ஒன்றிணையச் சாத்தியமுண்டா? அப்படியென்றால் அது எப்படியாக-எந்த அடிப்படையில் - அமையும்? அப்படி ஒன்றிணைய முடியவில்லையென்றால் அடுத்த கட்டம் என்ன?

சுமந்திரன் தனியொரு தரப்பாகவும் சிறிதரன் தனியொரு தரப்பாகவும் இனியும் ஒரு கட்சிக்குள் நீடிக்க முடியாத நிலையில் சுமந்திரன் தனித்துச் செல்வாரா? அப்படியாயின் அவரை ஆதரித்தோரின் நிலை என்ன? அல்லது அடுத்த கட்டமாக நடைபெறவுள்ள தலைவர் தெரிவில் யாருக்கு வெற்றி வாய்ப்புண்டு? அதில் சுமந்திரன் வெற்றியடைந்தால் சிறிதரன் தரப்பின் கதியென்ன? சிறிதரன் வெற்றியடைந்தால் சுமந்திரனின் நிலை என்ன? என்ற கேள்விகள் பலரிடத்திலும் எழுந்துள்ளன.

வழக்கு நீதிமன்றத்தில் இருந்தாலும் அதற்கு வெளியே இரு அணிகளையும் இணைத்துச் சமரசம் செய்வதற்கு சில மதத்தலைவர்களும்(?) ஊடகப் பொறுப்பாளிகளும் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். அது எந்தளவுக்குச் சாத்தியங்களை உண்டாக்கும் என்று தெரியவில்லை.

ஏனென்றால் இந்த முரண்பாடு தனியே யாப்பு மீறல், ஜனநாயக விரோதம், பதவிப் போட்டி என்பதற்கு அப்பால், அரசியல் நோக்கின் அடிப்படையிலானதுமாகும். சுமந்திரன் தரப்பின் அரசியல் அணுகுமுறை வேறு. சிறிதரன் தரப்பின் அரசியல் நிலைப்பாடும் அணுகுமுறையும் வேறு. அதுவே இங்கே அடிப்படையான முரண்பாடாகும்.

ஆகவே இதைச் சமரசத்துக்குட்படுத்துவது எளிதானதல்ல. தற்போது சில விட்டுக் கொடுப்புகள், நிபந்தனைகளின் அடிப்படையில் சமரசத்தை எட்டினாலும் எதிர்காலத்தில், அது உடைந்தே தீரும். அரசியல் பேச்சுகள், அரசியல் தீர்மானங்கள், தேர்தல் விஞ்ஞாபனங்கள், தேர்தலுக்கான இட ஒதுக்கீடுகள், ஆட்தேர்வுகள் போன்றவற்றில் நிச்சயமாக மீண்டும் முரண்பாடுகள் எழுந்தே தீரும்.

அவற்றை எளிதாகத் தீர்த்து விட முடியாது. ஏனென்றால் இந்தப் பிரச்சினை (முரண்பாடு) எழுந்தபோது சிறிதரன் தன்னுடைய வழமையான பாணியில் (அவருடைய விசேட குணவியல்பின்படி) சமரசத்துக்கோ விட்டுக் கொடுப்புக்கோ செல்லாமல் வழக்கை எதிர்கொள்ளவே தீர்மானித்தார். அதாவது சவாலை எதிர்கொள்ள முடிவெடுத்தார். என்பதால்தான் "தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும். இறுதியில் தர்மமே வெல்லும்" எனத் தன்னுடைய முகப்புத்தகத்தில் சிறிதரன் பதிவிட வேண்டியிருந்ததும்.

மேலும் இதற்காகவே அவர் கொடிகாமத்தில் கடந்த வாரம் தமிழ்த்தேசிய மாநாடு என்ற வகையில் தன்னுடைய ஆதரவாளர்களைத் திரட்டித் தன்னுடைய பலத்தைக் காட்ட முயற்சித்தார். இதில் கடும்போக்காளர்கள் ஒன்று திரண்டனர். இவர்கள் எல்லோரும் சுமந்திரனுக்கும் அவருடைய ஆதரவாளர்களுக்கும் முஸ்டியை உயர்த்திக் காட்டினார்கள். சுமந்திரன் தோற்றுப் பின்னடைவதாக ஒரு தோற்றம் பொது வெளியில் உருவாக்கப்பட்டது.

இது கத்திக்குக் கத்தி. சவாலுக்குச் சவால் என்ற மாதிரியானது. ஆனால், அரசியலில் இத்தகைய அணுகுமுறை பயன்தராது. அதன் பயனையே (11 ஆம் பக்கம் பார்க்க)



“அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்”
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
news@theempunal.com
THEEMPUNAL தீம்புனல்

# மகளிரைப் போற்றுவோம்

சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8 அன்று கொண்டாடப்படுகிறது, இது பெண்களின் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் சாதனைகளைக் கொண்டாடும் உலகளாவிய தினமாகும். பெண்களின் சமத்துவத்தை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைக்கான அழைப்பையும் இந்த நாள் குறிக்கிறது.

IWD ஒரு நூற்றாண்டிற்கும் மேலாக நிகழ்ந்தது, 1911 இல் முதல் IWD கூட்டம் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களால் ஆதரிக்கப்பட்டது. இன்று, IWD எல்லா இடங்களிலும் கூட்டாக அனைத்து குழுக்களுக்கும் சொந்தமானது. IWD என்பது நாடு, குழு அல்லது அமைப்பு சார்ந்தது அல்ல.

IWD இன் வேர்கள் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நீண்டுள்ளது, பெண்கள் இயக்கங்கள் மேம்பட்ட பணி நிலைமைகள், வாக்குரிமை மற்றும் சமூக சமத்துவத்திற்காக போராடின.

அமெரிக்காவின் சோசலிஷ கட்சியின் பிரகடனத்தைத் தொடர்ந்து 1909 ஆம் ஆண்டு பெப்ரவரி 28 ஆம் திகதி அமெரிக்காவில் தேசிய மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. 1910 ஆம் ஆண்டில், கோபன்ஹேகனில் நடந்த உழைக்கும் பெண்களுக்கான சர்வதேச மாநாட்டின் போது, கிளாரா ஜெட்கின், பெண்களின் உரிமைகள் மற்றும் வாக்குரிமைக்காக வாதிடுவதற்காக வருடாந்திர மகளிர் தினத்தை நிறுவ பரிந்துரைத்தார். இந்த முன்மொழிவு ஒருமனதாக ஒப்புதல் பெற்றது, 1911 இல் முதல் IWD க்கு வழிவகுத்தது, இது அவுஸ்திரேலியா, டென்மார்க், ஜேர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து முழுவதும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களால் கொண்டாடப்பட்டது.

உள்ளடக்கத்தை உண்மையிலேயே ஊக்குவிப்பது என்றால் என்ன?

உள்ளடக்கத்தை ஊக்குவிப்பது என்பது IWD 2024 மற்றும் அதற்கு அப்பால் பன்முகத்தன்மை மற்றும் அதிகாரமளிப்பைக் கொண்டாடுவதாகும்.

2024 ஆம் ஆண்டில், சமூகத்தின் அனைத்து அம்சங்களிலும் பன்முகத்தன்மை மற்றும் அதிகாரமளித்தலின் முக்கியத்துவத்தை Inspire Inclusion வலியுறுத்துகிறது. பாலின சமத்துவத்தை அடைவதில் உள்ளடக்குதலின் முக்கிய பங்கை இந்த ஆண்டு பிரச்சாரக் கருப்பொருள் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. தடைகளைத் தகர்க்கவும், ஒரே மாதிரியான கருத்துகளை சவால் செய்யவும் மற்றும் அனைத்துப் பெண்களும் மதிக்கப்படும் மற்றும் மதிக்கப்படும் சூழலை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Inspire Inclusion, விளிம்புநிலை சமூகங்கள் உட்பட அனைத்துத் தரப்பு பெண்களின் தனித்துவமான கண்ணோட்டங்களையும் பங்களிப்புகளையும் அங்கீகரிக்க அனைவரையும் ஊக்குவிக்கிறது.

Inspire Inclusion இன் முக்கிய தூண்களில் ஒன்று தலைமை மற்றும் முடிவெடுக்கும் நிலைகளில் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதாகும். பெண்கள், குறிப்பாக பிரதிநிதித்துவம் குறைந்த குழுக்களைச் சேர்ந்தவர்கள், தலைமைப் பாத்திரங்களைத் தேடும்போது தடைகளை எதிர்கொள்கின்றனர். சேர்க்கையை ஊக்குவிப்பதன் மூலம், அமைப்புகளும் சமூகங்களும் பல்வேறு முன்னோக்குகளின் முழுத் திறனையும் பயன்படுத்திக் கொள்ள முடியும், இது சிறந்த முடிவிற்கு வழிவகுக்கும், இது பெண்களைச் சேர்ப்பதை ஊக்குவிப்பதிலும் பெண்களை மேம்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

கல்வியும் விழிப்புணர்வும் பெண்களைச் சேர்ப்பதிலும், அதிகாரம் அளிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. வழிகாட்டுதல் திட்டங்கள், கல்விப் பட்டறைகள் மற்றும் பிரச்சாரங்கள் போன்ற முன்முயற்சிகள் மூலம், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் பெண்கள் முன்னேற வாய்ப்புகளை உருவாக்க முடியும். ஆதரவு மற்றும் வளங்களை வழங்குவதன் மூலம், தடைகளைக் கடக்க மற்றும் அவர்களின் முழு திறனை அடைய பெண்களுக்கு அதிகாரம் அளிக்க முடியும். ■

# தமிழ், முஸ்லிம் மக்கள் சேர்ந்தே என்னை விரட்டியடித்தனர் கோட்டபாய ராஜபக்ஷ




முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தான் விரட்டியடிக்கப்பட்டது குறித்த ஒரு புத்தகத்தை அண்மையில் வெளியிட்டிருந்தார். இந்தப் புத்தகத்தில் பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துகளை அவர் முன்வைத்து வருகின்றார்.

குறிப்பாக தமிழ் முஸ்லிம் மக்களுக்கு தன்னுடன் இருந்த முரண்பாடு மற்றும் இதர காரணங்களுக்காக அந்த இரண்டு சமூகமும் ஒன்றாக இணைந்து “அரகலய” போராட்டத்தில் தன்னை எதிர்த்ததாக தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கொழும்பு மற்றும் அதனை சுற்றி நடந்த போராட்டங்களில் இந்த விடயம் வெளிப்படையாக தெரிந்ததாகவும் தான் ஆட்சியில் நீடித்தால் சிறுபான்மை மக்களைவிட இந்த நாட்டு சிங்கள பௌத்தர்கள் வலுப்பெற்றுவிடுவார்கள் என்ற அச்சத்தினால் தமிழ், முஸ்லிம்கள் இதனை செய்திருக்கலாம் என்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

செல்வாக்கு மிக்க வெளிநாட்டு நிறுவனங்கள், சில உள்ளூர் குழுக்களுடன் இணைந்து, ஜனாதிபதி பதவியில் இருந்து தம்மை வெளியேற்றும் நோக்கில் செயற்பட்டதாக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தற்போது, இலங்கையில் கிடைக்கும் கோட்டபாய ராஜபக்ஷவின் “என்னை ஜனாதிபதி பதவியில் இருந்து வெளியேற்ற சதி” என்ற நூலிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் அந்தப் புத்தகத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,

“கணிசமான நிதி ஆதரவால் என்னை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கான முயற்சிகள் மேலும் வலுப்பெற்றதோடு வெளிநாட்டு சக்தி ஒன்று என்னை பதவி விலக வேண்டாம் என கடுமையாக வலியுறுத்தியிருந்தது. இந்த வெளிநாட்டு நிறுவனம் இலங்கைக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கியுள்ளது.

சில செல்வாக்குமிக்க நாடுகள் உலக அரங்கில் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் வெற்றியாளர்களாக தங்களைக் காட்டிக் கொள்கின்றன.

முடியாத காலதாமதம் ஏற்பட்டதால், அனைத்து பாதுகாப்புத் தலைவர்களையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுத்தோம்.

2022 ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி காலை, ஜனாதிபதி மாளிகையில் அமைக்கப்பட்டிருந்த செயற்பாட்டு அறையில், பாதுகாப்புச் செயலாளர், இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படைத் தளபதிகள், பொலிஸ் அதிபர் மற்றும் புலனாய்வுத்துறையின் இயக்குநர் ஆகியோர் இருந்தனர்.

அனைத்து அணுகு சாலைகளையும் மறித்து போராட்டக்காரர்கள் கொழும்புக்கு வருவதைத் தடுக்க இதன்போது திட்டமிடப்பட்டது எனினும், அத்தகைய சாலைத் தடைகள் எதுவும் நிறுவப்படவில்லை.

எனவே, எதிர்ப்பாளர்கள் ஜனாதிபதி மாளிகையில் கிட்டத்தட்ட எதிர்ப்பின்றி குவிந்தனர். மூழ்கும் கப்பலை தாம் தனியாக கைவிட்டதாக சிலர் கூறினாலும், தாம் பதவி விலகும் போது இலங்கை வீழ்ச்சியடைந்த நிலையில் இல்லை என்பதை தெளிவுபடுத்த வேண்டியது அவசியமானது.

2022 மார்ச் - ஏப்ரலில் தன்னை அதிகாரத்தில் இருந்து அகற்றுவதை நோக்கமாகக் கொண்டு உன்னிப்பாக திட்டமிடப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சதியை நான் எதிர்கொண்டேன்.

இந்த சூழ்நிலையில், தனது பதவிக்காலத்தை மேலும் இரண்டு ஆண்டுகள் நீடிப்பதற்காக ஒரு உயிரை தியாகம் செய்வது வீண் என்று நான் கருதினேன்” என குறிப்பிட்டுள்ளார். ■

# சர்வதேச ரீதியில் சாதனை செய்த பெண்கள்



21ஆம் நூற்றாண்டில் மாறிக் கொண்டிருக்கும் அதீத தொழில்நுட்ப மாற்றங்களுடன்கூடிய இன்றைய காலகட்டத்தில் உலகில் மனிதனைப் படைக்கும் சக்தி சொரூபமாகவும், கண்ணில்பட்ட தெய்வமாகவும், வாழும் கடவுளாகவும் நம் முன்னோர்களால் என்றும் பெண்கள் போற்றப்பட்டு வருகின்றனர். கலை, அரசியல், கல்வி, பொருளாதாரம், கலாசாரம், விளையாட்டு, விஞ்ஞானம், கண்டுபிடிப்பு, வணிகம், சட்டம் முதலான பல துறைகளில் வெவ்வேறு பதவிகளில் தங்களுக்கான அங்கீகாரத்தை தாபித்து ஆண்களுக்கு சரிநிகராக சர்வதேச துறைகளில் பெண்கள் தனக்கென உறுதியானதும், நிலையானதும், கௌரவமானதுமான இடங்களைப் பிடித்துள்ளனர். இன்று பெண்ணடிமை ஒழிந்து நாடு கடந்து, கடல் கடந்து பல்வேறு கோணங்களில் ஆகாய விமானம் ஓட்டுவது, புகையிரத இயந்திரம் இயக்குவது, அறிவியல் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குவது, கணினித் துறையில் புரட்சிகரமான சாதனைகளை நிகழ்த்துவது என்று பெண்கள் முத்திரை பதிக்காத துறைகளே இல்லை என வியக்கும் அளவிற்கு சிறந்து விளங்குகிறார்கள்.

இப்பொழுது சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் வெல்வதுமான பாரதியின் புதுமைப் பெண்கள் உருவாகிக் கொண்டிருப்பது மட்டுமின்றி குடும்பம், பதவி, கௌரவம், பாரம்பரியம் என அனைத்தையும் பேணி வருகிறார்கள். பெண்களே நாட்டின் கண்கள், நம்மை பெற்றவள் பெண், நமது சந்ததியை பெற்றுக்கொடுப்பவள் பெண், மனித வாழ்வில் தாய், மனைவி, மகள், சகோதரி என பல பாத்திரங்களில் நல்ல உறவாக இருப்பவளும் பெண். கங்கா, யமுனா, காவேரி என புண்ணிய நதியாக இருப்பவளும் பெண். சர்வதேச வளர்ச்சிப் பாதையில் சமுதாயத்தை அழைத்து செல்லும் பெண்கள் பாதுகாப்போடு நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். இதற்காக, பெண்கல்வி, பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் அவர்களது நல்வாழ்வை மேம்படுத்தும் பொருட்டு உலகளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்வுகள் மற்றும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



கந்தசாமி அபிலாஷ்
BEd ( EUSL), HND in English, NCEnglish, MEd (EUSL)

இலங்கையில், 1978 ஆம் ஆண்டு முதல் மகளிர் தினக் கொண்டாட்டம் இடம்பெற்று வருவதோடு, அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும், வெவ்வேறு கருப்பொருளை மையப்படுத்தி கொண்டாட்டம் இடம்பெற்று வருகிறது. இலங்கை தற்போது பல வேறு சமூக மற்றும் பொருளாதார சவால்களை எதிர்கொண்டுள்ள போதிலும், நாட்டிலுள்ள பெண்கள் தொடர்ச்சியாக வலிமை மற்றும் மீளெழுச்சித்தன்மையை வெளிப்படுத்தி முன்னோக்கி பயணிப்பதன் மூலம், மரியாதையையும் பாராட்டையும் பெறுகின்றனர். அந்த வகையில், இவ்வருட மகளிர் தினமானது இலங்கைப் பெண்களின் குறிப்பிடும் படியான சாதனைகளை கௌரவிக்கும் பொருட்டு 'பெண்களில் முதலீடு செய்யுங்கள்: முன்னேற்றத்தை துரிதப்படுத்துங்கள்" எனும் கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகின்றது.

பாலின சமத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பெண்களின் சாதனைகளைக் கொண்டாடவும், நேர்மறையான மாற்றத்திற்காக வாதிடவும் இந்த நாளின்



நோக்கமாக உள்ளது. உலகெங்கிலும் உள்ள பெண்களின் பங்களிப்பை அங்கீகரித்து, அனைத்துப் பெண்களையும் உள்ளடக்கி சமத்துவமான சமூகத்தை நோக்கிச் செயற்பட இது ஒரு வாய்ப்பாகும். உலகளாவிய இயக்கத்தில் இணைந்து, பெண்களின் உரிமைகள் மற்றும் அதிகாரமளித்தலுக்கு ஆதரவளிக்க நடவடிக்கை எடுக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையால் இத்தினம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. புவிசார் அரசியல் மோதல்களுடன் நாட்டில் நிலவும் வறுமை நிலைகள் மற்றும் பருவநிலை மாற்றத்தின் அதிகரித்து வரும் தாக்கங்கள் வரை பல நெருக்கடிகளை உலகம் எதிர்கொள்கிறது. பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் தீர்வுகளால் மட்டுமே இந்த சவால்களை எதிர்கொள்ள முடியும். பெண்களில் முதலீடு செய்வதன் மூலம் நாம் மாற்றத்தைத் தூண்டலாம். மேலும், அனைவருக்கும் ஆரோக்கியமானதும், பாதுகாப்பானதுமான சூழ்நிலைகளை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் பெண்களை சமமான உலகத்தை நோக்கி நகர்த்துவதன் மூலம் மாத்திரமே சமூக மாற்றத்தை துரிதப்படுத்தலாம். 2030 ஆம் ஆண்டிற்குள் 342 மில்லியனுக்கும் அதிகமான பெண்கள் மற்றும் சிறுமிகள் தீவிர வறுமையில் வாழலாம் என ஐ.நா அறிக்கை குறிப்பிடுகிறது. பெண்களின் தேவைகளுக்கேற்ப முன்னுரிமைகள் பரிசீலிக்கப்படுவதை உறுதிசெய்ய, ஒவ்வொரு நாட்டு அரசாங்கமும் கட்டாயமாக பெண்களின் பாலினம் சார்ந்த நிதியுதவிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

அத்துடன் நாட்டுப் பெண்களின் அத்தியாவசிய சேவைகளையும், சமூகப் பாதுகாப்பிற்கான பொதுச் செலவீனங்களை அதிகரிக்க வேண்டும். ஊதியம் மற்றும் ஊதியம் பெறாத பராமரிப்புப் பணியின் மூலம் உலகெங்கிலும் உள்ள பொருளாதாரத்திற்கு பெண்கள் செய்யும் முக்கிய பங்களிப்பை ஒவ்வொருவரும் மதிப்பது மட்டுமின்றி அங்கீகரிக்கவும் வேண்டும். ஏனெனில் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் மூன்று மடங்கு அதிக நேரத்தைச் சம்பளமில்லாத பராமரிப்புப் பணிகளில் செலவிடுகின்றனர். மேலும், இந்தச் செயற்பாடுகளுக்கு குறித்த தொகை ஒதுக்கப்பட்டால் அவர்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 சதவீதத்திற்கும் அதிகமாகக் கணக்கிடப்படுவர். பெண்களில் முதலீடு செய்வது, பாலின சமத்துவத்தை ஊக்குவிப்பது முதலான செயற்பாடுகள் சமுதாயத்தில் உள்ள அனைவருக்கும் வளமான எதிர்காலத்தை உருவாக்குகிறது.

இலங்கையில் பெண்களுக்கான அதிகாரமளித்தல் மற்றும் தலைமைத்துவத்தைக் கொண்டாடும் வகையில், இலங்கையின் பெண்கள் தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனம் (WCIC) மகளிர் தலைமைத்துவ மன்றத்துடன் இணைந்து இவ்வருடத்தில் பல செயற்றிட்டங்களை வழங்கத் தயாராகி வருகிறது. இது "Inspire Inclusion - Count Her In" எனும் கருப்பொருளில் மார்ச் 14, 2024 இல் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், கொழும்பு - ஜப்பான் அரசாங்கம் இணைந்து ஐ.நா பெண்களின் ஆதரவுடன் 2023- 2027 காலப்பகுதியில் பெண்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு தொடர்பான அதன் முதல் தேசிய செயற்றிட்டத்தை (WPS) இலங்கை ஏற்றுக்கொண்டுள்ளது.

பெண்கள் மீது காட்டப்படும் பாகுபாடு என்பது மனித உரிமை மீறல்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்த பாகுபாடு பெண்கள் மீது சுமத்தப்படும் மாபெரும் தடையாகும். பெண்களின் துணையுடனே தான் பல சமூக, பொருளாதார, அரசியல் பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அமைதியான குடும்ப சூழல், பொருளாதார வளர்ச்சி, சீரான முன்னேற்றத்திற்கு பெண்களின் பங்களிப்பு ஒவ்வொரு குடும்பம் முதல் சர்வதேச சமூகம் வரையும் தேவைப்படுகிறது. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு துறைகளை வலுப்படுத்த பெண்களின் பங்கு தேவைப்படுகிறது. அந்த வகையில் மேரி கியூரி, புளோரன்ஸ் நைட்டிங்கேள், ஔவையார், அன்னை தெரேசா, ராணி லக்ஷ்மிபாய், சாவித்ரிபாய் பூலே, ஆனந்திபாய் ஜோஷிசரோஜினி, நாயுடு விஜய லட்சுமி பண்டிட், கமலா தேவிசட்டோபாத்யாய், நீதிபதி அன்னா சாண்டி, சுசேத்தா கிரிப்லானி, கிட்டுர் சென்னம்மா, பூலாந் தேவி, அனுலாதேவி, இந்திராகாந்தி, கல்பனா சாவ்லா என சாதனைப் பெண்களின் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது எனலாம்.

சர்வதேச ரீதியில் பல்துறைகளிலும் பெண்களின் சாதனைகள் போற்றத்தக்கது. காவல்துறை, சட்டத்துறை, அரசியல் துறை, தகவல் தொடர்பு துறை, மருத்துவத் துறை, போக்குவரத்து துறை, விளையாட்டுத் துறை, வணிகத் துறை உட்பட அனைத்து துறைகளிலும் இன்று பெண்கள் உயர் பதவிகளை வகித்து திறம்பட செயல்படுகின்றனர். போக்குவரத்துத் துறையிலும் பெண் ஓட்டுநர்கள் வந்து விட்டனர். வேளாண்மை துறையிலும் பெண்களின் பங்களிப்பு உள்ளது சிறப்புக்குரியதாகும். குடும்பப் பெண்கள் தங்கள் வீட்டுக் கடமைகளை முடித்துவிட்டு பகுதி நேர வேலைக்கு சென்று கணவரின் கஷ்டத்தில் பங்கெடுக்கின்றனர். விளையாட்டுத் துறைகளிலும் பெண்கள் பங்கேற்று நாட்டிற்கு பதக்கங்களை பெற்றுத் தந்துள்ளார்கள். அண்மையில் இலங்கையில் உலக சாதனை படைத்த தமிழ் சிறுமி



நேரடியாக நுவரெலியா மாவட்டத்தில் மஸ்கலிய தோட்டத்திலிருந்து பொலிஸ் நிலையம் வரை நடந்து சென்று உலக சாதனை படைத்துள்ளார்.

BBC 100 women 2020 அறிக்கையின் படி, சைவாணி பில்கிஸ் மானசி ஜோசி, ரிதிமா பாண்டே முதலாக 100 பெண்களின் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டு அவர்கள் சாதனையாளர்களாகவும் அறிவிக்கப்பட்டனர். உலகை மாற்றிய சக்தி வாய்ந்த நூறு பெண்களின் பட்டியலில் அறிவியல் புலத்தில் மிக அரிதான சாதனை படைத்தவராக மேரி கியூரி அம்மையார் குறிப்பிடத்தக்கவர். சிறுவயதில் இலங்கைச் சிறுமி ஒருவர் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். பிரித்தானியாவில் கிறிஸ்டியனில் நடைபெற்ற 11 ஆவது (11 ஆம் பக்கம் பார்க்க)






# மார்ச் 08 : அனைத்துலக பெண்கள் தினம்

# பெண்கள் எழுச்சி அணைந்து விடாது, அடுத்த தலைமுறைக்கு கைமாற்றுவோம்

## பிரான்ஸிலிருந்து சந்திரிக்கா



சந்திரிக்கா

இப்போது நூறு ஆண்டுகளைக் கடந்து சர்வதேச ரீதியாக ஒவ்வொரு மார்ச் மாதமும் 08 ஆம் திகதியில் கொண்டாடப் பட்டுவரும் "பெண்கள் தின" மானது, அதன் அர்த்த கனபரிமாணம் பற்றி அறியப்படாம லேயே, காதலர் தினம், வேறு களியாட்ட தின நிகழ்வுகள் போல கொண்டாடப்படுவதற்காக மட்டுமே உருவாக்கப்பட்ட ஒன்று அல்ல இது.

பெண்கள் தம்மீதான சகல ஒடுக்குமுறை, வன்முறைகளிலிருந்து விடுபடவும், தங்கள் உடலையும் தங்கள் வாழ்க்கையையும் சுதந்திரமாக அனுபவிக்கவும் பலாத்காரமற்ற, ஆண்-பெண் பாகுபாடு இல்லாமல் சமமாக வாழும் உரிமையும், உடல் மற்றும் மனோ ஆரோக்கியத் தின் மிக உயர்ந்த தரத்திற்கான கல்வி கற்கும் உரிமை, சொத்துரிமை, வாக்குரிமை மற்றும் சம ஊதியத்தில் உரிமை ஆகியவற்றை பெறுவதற்காகவும், சுதந்திர உணர்வு பெற்று விழித்தெழுந்த பெண்களின் வீரம் செறிந்த தொடர் போராட்டங்களினால் உருவாகியதாகும்.

எழுத்துக்கள், வாதங்கள் என நீண்ட நெடிய இப்போராட்டத்தில் இரத்தமும் சதையுமாக தம்மை அர்ப்பணித்த பெண்களின் தியாகம் பற்றிய எந்தவித எண்ணமும், உணர்வும் இல்லாமல், வெறுமனே பரஸ்பரம் பூச்செண்டுகள், பரிசுப் பொருட்கள் பரிமாறி வாழ்த்துகள் சொல்வதுமாக இத்தினத்தை பெரும்பான்மையானவர்கள் கொண்டாடும் நிலைதான் இன்றைய யதார்த்தம்.

ஜேர்மன் நாட்டைச்சேர்ந்த கிளாரா ஜெட்கின் (Clara zetkin) எனும் மாபெரும் பெண் புரட்சியாளரை இன்று எத்தனை பெண்கள் அறிந்துள்ளார்கள்? எனும் கேள்வி எழுகிறது.

"சர்வதேசப் பெண்கள் தினம் "நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற யோசனையை முன்மொழிந்து அதன் ஆணிவேராக செயற்பட்டவர் கிளாரா ஜெட்கின். பெண்ணானவள், மனைவியாகவோ, தாயாகவோ, பிறரைச்சார்ந்து வாழ்க்கை நடத்துபவள் என்னும் நிலைமை மாறவேண்டும் என்றார் கிளாரா,

" தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும்
கண் திறந்திட வேண்டும்
பெண் விடுதலை வேண்டும்"

என்ற மகாகவி பாரதியாரின் கூற்றை, நூறாண்டுகளுக்கு முன்பே கண்ட எமது சமூகம் இன்று எந்தளவுக்கு பெண்கள் முன்னேற்றத்தினை கண்டிருக்க வேண்டும்!?

ஆனால், ஊதிப் பெருத்த சந்தைப் பொருளாதாரத்தின் நுகர்வோராகவும், நுகர் பண்டங்களாகவும் பெண்கள் மாற்றப்பட்டு முதலாளித்துவ வெற்றிகளுக்காக அவர்கள் பயன்படுத்தப்படுவதைத் தான் காண்கிறோம்.

உலக அளவில் உழைக்கும் வயதிலுள்ள பெண்களில் பாதிப்பேர் மட்டுமே வேலைக்குச் செல்கின்றனர். உழைப்புக்கான உடல்தகுதி, திறன், அறிவுக்கூர்மை இருந்தும் வேலைக்குப் போகும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே இருப்பதற்கு என்ன காரணம்?

பல நாடுகளில் பெண்கள் கல்வி கற்கவும் வேலை செய்யவும் சட்டரீதியான அனுமதிகள் இருந்தாலும், ஆணதிகார பிற்போக்கு கலாச்சார பாலின சமத்துவமற்ற நிலை அதனை அனுமதிப்பதில்லை.

ஆப்கானிஸ்தான் இதற்கு சிறந்த உதாரணம்! அங்கே பெண்கள் கல்வி மறுப்பு சட்டமாகவே உள்ளது. நம் தேசங்களில் அது வெவ்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது.

ஆசிய நாடுகளில்தான் பெண்கள் அனைத்திலுமாக ஒடுக்கப்படுகிறார்கள் என எண்ணிக்கொண்டிருந்தோம். ஆனால் ஐரோப்பிய, மேலைத் தேசங்களில் நடைபெற்ற, நடைபெறும் பெண்களுக்கெதிரான ஆணாதிக்க ஒடுக்குமுறைகளை வரலாற்றுக் காலத்திலிருந்து இன்று வரையானவற்றையும் அறியும் போது அதிர்ச்சியளிக்கிறது.

முதலாளித்துவ ஜனநாயகம் என்பது பெண்களை விடுதலை செய்திருக்கிறது எனும் கூற்று, அதன் அர்த்தத்தில் முதலாளித்துவத்தின் 'நலன்' சார்ந்தது என்பதனை புரிந்து கொள்வதற்கு அதீத ஆராய்ச்சி தேவையில்லை.

இதன் காரணமே மற்றெல்லா நாடுகளை விடவும் ஐரோப்பாவில் பெண்ணெழுச்சிக்கான ஆழமான விதைகள் ஊன்றப்பட்டு போராட்டங்களாக அவை வெடித்தன.

1944 ஆம் ஆண்டில்தான் பிரான்சில் பெண்களுக்கான வாக்களிக்கும் உரிமை கிடைத்தது. அதுவும் பெரும் போராட்டங்களுக்குப் பின்னராகத்தான். ஆனால், இலங்கையில் இதற்கு பதின்மூன்று வருடங்களுக்கு முன்னரேயே பெண்களுக்கான வாக்குரிமை கிடைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

பிரான்சில் பெண்களின் வாக்குரிமைக்கான போராட்டத்தின் மிகப் பெரும் ஆளுமையாகத் திகழ்ந்தவர் லூயிஸ் வெயிஸ் (Louise Weiss) எனும் பெண்மணி.

பெண்விடுதலைக்கு ஆதாரமான இரண்டாம் பால் இனம் (The Second Sex) எனும் மிகப் பெரும் புகழ்பெற்ற நூல் சிமோன் தி பூவார் ( Simone de Beauvoir ) எனும் பிரெஞ்சு பெண் எழுத்தாளரால் எழுதப்பட்டது.

பிரெஞ்சு மொழியில் இது வெளியாகியிருந்தாலும் பல ஐரோப்பிய மொழிகளில் மாற்றம் பெற்று, இன்றும் பெண்களின் அரசியல், சமூக விடுதலைக்கான கைநூலாக விளங்குகின்றது.

பிரெஞ்சு தத்துவவாதி ஜீன் போல் சாத்தர் ( Jean-Paul Sartre ) இவர் காலத்தவர்தான். இவர்கள் இருவரும் இணைந்து நிறைய தத்துவ நடைமுறைப் போராட்டங்களை முன்னெடுத்தமை மறக்கமுடியாத வரலாற்று நிகழ்வுகள்.

பெண்கள் தமது தாயாகும் உரிமையை தாமே தீர்மானிக்க முடியாத கால கட்டமொன்று இங்கிருந்தது. அதாவது தவறுதலாக ஏற்பட்ட ' வேண்டாத கர்ப்பமாக ' இருந்தால், அவர்கள் அதனை கலைத்து விடுதல் சுலபமானதாக இல்லாமல், அது தண்டனைக்குரிய குற்றமாகவுமிருந்தது.

எல்லாமே ஒரு மதத்தின் பிடியில் இருந்தது. பிரான்சில் இதற்கெதிராக கடுமையான தொடர் போராட்டத்தை மேற்கொண்டு பெண்களின் 'கருக்கலைப்பு ' உரிமையை கடுமையான எதிர்ப்புகளுக்கும் தடைகளுக்கும் மத்தியில் விடாது போராடி தன் வாதத் திறமையால் சட்டரீதியாக அதனை நிறைவேற்றி சாதித்த பெண் போராளி சிமோன்வில் (Simon veil) என்பவர்.

பிரான்சில் அதிகளவிலான பாடசாலைகளுக்கு இவர் பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஆனால், இங்கு பிறந்து வளர்ந்து கல்விகற்கும் எமது பிள்ளைகளிடம் இவர்களைப்பற்றிக் கேட்டால், பெரும்பாலும் "தெரியாது "என்றே பதில்வரும். இது, யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று இங்குவந்த பலரிடம் "ரஜனி திராணகமவை தெரியுமா? "எனக் கேட்டபோது "தெரியாது "என அவர்கள் சொல்லி வியக்கவைத்ததற்கு சமம்!

தேடலில்லாத சமூகம் எப்படி தனது எல்லா விதமான ஒடுக்கு முறைகளிலுமிருந்தும் விடுதலையைச் சாத்தியமாக்கும்? கட்டாயத் திருமணம், பால்யகாலத் திருமணம் யாவும் எதோ வளர்ச்சியடையாத நாடுகளில் மட்டுமே இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், அது தவறு. சில வளர்ச்சியடைந்த நாடுகளில் சட்டரீதியாக கருக்கலைப்பு அங்கீகரிக்கப் பட்டிருந்தாலும் இன்றுவரை இதனை, மதச்சார்பானவர்கள் நேரடி எதிர்ப்பில்லாமல், உள்ளார்ந்த - மறைமுக எதிர்ப்பைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய நேர்ந்தபோது அதிர்ச்சியடைந்தேன். (12 ஆம் பக்கம் பார்க்க...)

# நிலமொழி

நதுநசி

சிறுகதை

நடுநிசியாகியும் இன்னும் நித்திரைக்குப் போகாது வேலையில் மூழ்கிப் போயிருந்தாள் துவாரகி.

"என்னக்கா? இன்னும் நித்திரை வரல்லையோ? நான் போய்ப்படுக்கப் போறேன்." சொல்லிக் கொண்டவாறே இருக்கையை விட்டு எழுந்தாள் கவியரசி.பரனில் தடியால் இருக்கைகள் செய்திருந்தனர். இன்று அதிகாலை முதல் வேலையில் மூழ்கியவர்களுக்கு இன்னமும் வேலையை முடிக்க முடியவில்லை. " ம்ம்" அவ்வளவுதான்.வேறு சொற்களை சிந்த மறுத்தது துவாரகியின் உதடுகள். கவனம் அவளது வேலையில் இருந்தது. படுக்கையில் விழுந்த கவியரசி போர்வையை இழுத்து போர்த்திக் கொண்டாள். முகத்தையும் சேர்த்து மூடிக்கொண்டபடி.

" எத்தனை நாள் ஆச்சு.போர்வையை போர்த்திப்படுத்து. இண்டைக்கெண்டாலும் ஒரு நல்ல நித்திரை கொள்ள வேண்டும்."

மனதில் எண்ணிக்கொண்டாள் கவியரசி. துவாரகியின் புதிய அணி உருவாக்கப்பட்டு ஒரு வாரம்தான் இருக்கும். ஒரே அலைச்சல். எதிரியின் நிலங்களெல்லாம் திரிந்த கால்கள் இன்று அதிகாலை தான் பாதுகாப்பான நிலம் மீண்டு இருந்தன. "கவி! நாலு மணிக்கெல்லாம் எழும்பிடோணும்".

" ஏனக்கா? ......" மெல்ல கொஞ்ச நேரம் மௌனமாக இருந்த கவியரசி "இண்டைக்கெண்டாலும் நல்ல நித்திரை கொள்ளுவம் என்டு நினைச்சனக்கா" குரலில் ஒரு தவிப்பு தாகம் இருந்தது. கவியரசி சின்ன குழந்தை போலவே எல்லா நேரமும் இருப்பாள். பேச்சும்கூட அப்படித்தான்.

புரிந்து கொண்ட துவாரகி " சரி.சரி.படும். நான் பாத்துக் கொள்ளுறன். " பேச்சில் ஆதரவை கலந்திருந்தாள் துவாரகி. அவளது குரலின் ஓசை கவியரசிக்கு ஆறுதலை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

படுத்ததும் நித்திரையாகி விட்டாள். அவளைப் பார்த்த துவாரகிக்கு மெல்ல சிரிப்பு எட்டிப் பார்த்தது. குழி விழுத்தி புன்னகையை தோன்ற வெட்கிக் கொண்டான துவாரகியின் கன்னங்கள்.

நல்ல காற்று வீசியது.காற்றில் கலந்திருந்த உப்பு வாடை மூக்கை தூண்டியது.அலையும் கரை தழுவி மெல்ல சங்கீதம் பாடியபடி இருந்தது. கடற்கரையோரத்தில் நின்றிருந்த நாவல் மரமொன்றில் பரன் போட்டு இருந்தார்கள்.

காவல் கடமையில் இருந்த நிலமொழி தேனீரோடு வந்தாள். "துவாரகியக்கா" திரும்பிய துவாரகி "சொல்லுங்கோ" என்றாள்.

" தேத்தண்ணியக்கா" "நான் துவாரகி" என்றவள் சிரித்தவாறே தேனீர் கோப்பையை வாங்கிக் கொண்டாள். பென்சிலை வரைதாளினுள் வைத்து மூடி விட்டு நிமிர்ந்து இருந்தாள். தாளின் மீது தலைவரின் சிந்தனைத் துளிகள் எனப் பெயரிட்டி ருந்த அந்த புத்தகத்தையும் எடுத்து வைத்து விட்டாள்.

அவளது கால்கள் நாவல் மரக் கொப்புக்க ளில் உதைத்தவாறு இருந்தன. எந்த நொடியிலும் அவள் தாவி கீழே குதித்துக் கொள்ளும் வண்ணம் இருந்தது அது.

அவளது இடுப்பு பட்டிக்கு மேல் கருவி தாங்கிய மற்றொரு பட்டியும் ஒட்டி இருந் தது. எப்போதும் அது அப்படியே இருக்கும் படி வைத்திருப்பாள் துவாரகி. தேனீர் கோப் பையை எடுத்து தேனீரை பருகினாள்.

" நல்லாயிருக்கு நிலமொழி." "நான் நல்லா தேத்தண்ணி போடுவன்.வரக்குள்ள தேத்தண்ணிக் கடையில தான் நின்டனான். என்றாள் நிலமொழி. நீண்ட தலைமுடி.கருகரு என்று இருக்கும் அவளுக்கு. இறுக்கமாக பின்னி மடித்து வளைத்து கட்டியிருந்தாள். அவளது தலைமுடியைப் பற்றி அடிக்கடி அவளது அணி யினர் பேசிக்கொள்வதுண்டு.

துவாரகியின் அணிக்கு வந்ததும் நில மொழியின் நீண்ட கூந்தலை வெட்டிவிட வேண்டிய கட்டாயம் இருந்தது.புத்திசாதுரியமாக முடிவுகளை எடுத்துக்கொள்ளும் துவாரகி நிலமொழியின் கூந்தலை வெட்டிவிட கட்டளையிடவில்லை.

மாறாக எப்படி தலை கட்டவேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருந்தாள். " என்ன சொல்லுறாய்? அப்ப நீ பள்ளிக்கூடம் போகவில்லையா?"

வார்த்தைகளை மட்டாக கொட்டும் துவாரகி உதிர்ந்து விட்டாள் ஏக்கம் கலந்த குரலில்.

"இல்லையக்கா. நான் பத்தாமாண்டோடே படிப்பை விட்டுட்டன். அக்கா ஏழாமாண்டோட விட்டுட்டா"

" ஏன்?" "அம்மாவுக்கு ஒரு கால் இல்லை. கிளாலியில இருந்து ஆமிக்காரரர் செல்லடிக்கைக்க எங்கட வீட்டுக்கு மேலயும் ஒண்டு விழுந்து வெடிச்சப்ப நடந்தது." "அதில தான் எங்கட அப்பாவும் செத்தவர்." சொன்னவள் சுற்றும் முற்றும் ஒரு தடவை தன் பார்வையை சுழல விட்டாள்.

ஆரியக் கூத்தானாலும் காரியத்தில் கண்ணாயிருந்தாள் நிலமொழி. தன் அணியில் உறுப்பினர்களை துவாரகியே தெரிந்து எடுக்கலாம் என்ற சுதந்திரத்தில் அணிகளிடையே தேடியெடுத்திருந்த இருவர் தான் நிலமொழியும் கவி



யரசியும். ஆளுமையுள்ள துடிதுடிப்பான செயற்றிறன் மிக்க வீராங்கனைகளாக அவர்கள் இருந்தார்கள். "உன்னோட அக்கா எங்க இருக்கிறாங்கள்?" துவாரகி ஆர்வமானால் இப்போது. அவளுக்கு தன் குடும்பத்தின் நினைவு வந்திருக்க வேண்டும்.

சூரியக்கதிர் நடவடிக்கையில் இடம்பெயர்ந்து வந்து கொண்டிருந்த போது செல்லடியில் குடும்பத்தை மொத்தமா பறிகொடுத்தவள் துவாரகி.

செஞ்சோலையில இருந்து வளர்ந்தவள் பெரியவளானதும் தன்னையும் விடுதலை வேள்வியில் இணைத்துக் கொண்டிருந்தாள். " கொடிகாமத்திலதான்.அது அத்தான்ர ஊரக்கா" நிலமொழியின் பேச்சால் நினைவு மீண்டு வந்தவள் " அக்கா திருமணம் செய்திட்டா என. அம்மா எங்க அக்காவோடயா?"

" இல்லை" " அப்ப எங்க?" " அப்பாட்ட போய்ட்டா"

" என்ன?" கேள்வி பட்டென சுட்டது. இருந்தும் அதன் பின்னர் சில நொடிகள் யாரும் பேசிக் கொள்ளவில்லை. துவாரகி உற்று நோக்கினாள் நிலமொழியின் கண்களை.

எந்த கலக்கமும் இல்லாமல் இயல்பாக அமைதியாகவே அவள் இருந்தாள்.

கையில் இருந்த கருவியை தன்னோடு அணைத்தபடி. அதன் பட்டி அவளது தலையைத் தாண்டி அடுத்த தோளில் படிந்திருந்தது. "என்ன நிலமொழி. உனக்கு கவலையாக இல்லையா?" "இருந்திச்சக்கா." "இப்பவும் இருக்கு."

"ஆனாலும் எனக்கெண்டு யாராச்சும் இருந்து, அதை நான் சொல்ல கேட்டு, எனக்கு ஆதரவாக இருந்தால்தானே, இருக்கிற கவலைக்கு உயிர்ப்பிருக்கும்."

வார்த்தையில் வலி கலந்த உணர்வுகளினை கலந்து உதிர்ந்திருந்தாள் நிலமொழி.

துவாரகியின் கண்களில் நீர் கசிந்தது. சூழலின் தன்மை ஒலிகளால் குழப்பமடைந்தது. இருந்த குப்பி விளக்கை அணைத்து விட்டு இருந்த இடத்தில் பரவியிருந்த தன் உடைமைகளை உடல் பைகளில் எடுத்து வைத்துக் கொண்டாள் துவாரகி.

"அக்கா." "கவியரசியக்காவை எழுப்பவா?"

" வேண்டாம்." "நாங்கள் பாப்போம். நிலைமை மோசமானால் எழுப்புவோம்."

சத்தம் வானில் இருந்து வருவதை உணர்ந்து கொண்டனர். "வண்டு வருகுது. நடமாட்டத்தை குறைக்க வேண்டும். மரத்துக்கு கீழவே நில்லும். நிலவில அசைவு தெரியலாம்." ஒரு முன்னெச்சரிக்கை உணர்வு மேலிட துவாரகி நிலமொழிக்கு சொன்னவாறே மரத்தை விட்டு இறங்கினாள். அன்று பௌர்ணமி. முழு நிலா வரவுக்காலம். நிலவு உச்சிக்கு ஏறி மேற்கே இறங்கிக் கொண்டிருந்தது. நிலமெல்லாம் நல்ல நிலவொளி. அந்த ஒளியில் புத்தகம் படிக்கலாம். எழுத்துகள் நன்றாகவே தெரியும்.

மரக்கிளைகளினுள் அமைத்திருந்த பரனில் கிளைகளால் ஒரு கூடாரம் அமைத்திருந்தனர். ஒளி கூட மட்டாகத்தான் உள் வருமளவுக்கு. "அக்கா சத்தம் அங்கால போகுது. போட்டான் போல"

"ஓம். இந்த பாதையால அவன் நித்தம் போறவன் போல." தன் நாட்குறிப்பேட்டை எடுத்தாள் துவாரகி. "என்னக்கா?"

"நேரத்தை குறித்து வைக்க வேண்டும். இதுகள் போல் சில குறிப்புக்கள் பின்னுக்கு உதவும்." என்றவாறே தன் கையை திருப்பி கவுட்டு கட்டிய மணிக்கூட்டு முகப்பை திருப்பி பார்த்தாள் நேரத்தை. "அப்படியோ? மூன்று மணியாச்சு." "நில மொழி நீங்கள் போய் போடுங்கோ?" நிலமொழியின் காவல் கடமை நேரம் மூன்று மணியோட முடிந்து விடும். மூன்று பேர் மட்டுமே உள்ள அந்த அவதானிப்பு நிலையத்தில் ஒருவர் மாறி ஒருவர் காவல் கடமையில் இருந்ததாக வேண்டும். பாதுகாப்பு விடயத்தில் துவாரகி கண்டிப்பானவள். மூன்று மணியில் இருந்து ஆறு மணி வரை கவியரசியின் காவல் கடமை. நிலமொழி கவியரசியை எழுப்பிவிடப் போனாள்.

"வேண்டாம் நிலமொழி. நான் பாக்கிறேன்." என்றாள் துவாரகி. ஏன் எனக் கேட்க எண்ணியவள் கேட்காது கேட்பது போல் உடல் மொழியினை வெளிப்படுத்தினாள். கூடாரத்துக்குள் வந்த கொஞ்ச நிலவொளியில் அவளது குறிப்புணர்வை அவதானித்த துவாரகி

"அவள் நீண்ட நேரம் என்னோட வரைபட வேலையில இருந்தவள். களைச்சுப் போயிருப்பாள். போர்வை போத்திப்படுத்து கன நாளாம். இண்டைக்கு படுக்கிறன் என்டவள்.அதான் நான் பாக்கிறன்." துவாரகியின் அணிக்கு வந்து சில நாட்கள்தான் ஆன போதும் துவாரகியின் இயல்புகளை நன்றாகவே புரிந்து வைத்திருந்தாள் நிலமொழி. இருந்தும் அவளை இப்படிப்பல நேரங்களில் வியப்பில் ஆழ்த்தி விடுவாள் துவாரகி.

கவியரசியைப் பார்த்த நிலமொழி "இந்தமாதிரி ஒரு உறவு இங்காவது கிடைக்கிறதே" என்று தனக்குள் எண்ணிக் கொண்டவாறே படுக்கைக்கு ஆயத்தமானாள்.

கவியரசிக்கு அவளது வீட்டில் இருந்து உடுப்புக்களோடு போர்வையும் வந்திருந்தது. முன்னரங்கில் இருந்தால் போர்வை நித்திரைக்கு சாத்தியம் குறைவு. துவாரகியின் அணிக்கு மாறியதும் அது தாராளமாகவே இருந்தது. எதிரியின் குகைக்குள்ளும் அது அப்பப்போ அவளுக்கு கிடைத்திருந்தது.

நிலமொழிக்கு போர்வையோடு உடுப்புக்களை கொடுத்துவிட அம்மா இல்லை. நிலமொழியின் மனதில் அலைமோதியது நிகழ்வுகளின் நினைவுகள். கவியரசிக்கு அருகில் அமர்ந்தவளை "நிலமொழி" " ஓமக்கா" கீழே நின்று அழைத்த துவாரகியின் அழைப்புக்கு குரல் கொடுத்தவாறே எட்டிப் பார்த்து " வாறதாக்கா" என்றாள். " வேண்டாம்."

"இந்தாங்கோ... உங்களுக்கும் போர்வையிருக்கு" நிலமொழிக்கு தன் அம்மாவைப் பார்த்து போல இருந்தது துவாரகி போர்வையை எடுத்துக்கொடுக்கும் போது. அம்மாதான் போர்த்தி விடுவாள் நிலமொழி படுக்கும்போது... நித்திரையாகும்வரை அவள் அம்மாவை கட்டிப்பிடித்தபடிதான் படுத்திருப்பாள். வீட்டில் நிலமொழி கடைக்குட்டி. அப்பாவோட செல்லம். கூடவே அம்மோவோட செல்லமும்.அக்கா அவளுக்கு இன்னொரு அம்மா மாதிரி. இழப்புக்களின் வலி தந்த வெறுப்பு வாழ்வியல் சுகங்களை துறந்து போராடத் தூண்டி விட்டது நிலமொழியை. "என்ன நிலமொழி?" "இந்தாங்கோ பிடியுங்கோ!" துவாரகியின் குரலில் நினைவுகள் கலைந்திட சுயநினைவுக்கு திரும்பிக் கொண்டாள். போர்வையை எட்டி வாங்கிக் கொண்டாள். இப்போது தான் நிலமொழியின் கண்கள் பனித்துக்கொண்டன. அவளது கவலைகளும் உயிர்த்துக் கொண்டன. **(முற்றும்...)**

# தாகம் தீர நீரை நாம்

✍ நதுநசி



ஓசைகள் ஒலித்திட
காற்றில் கலந்திடும்
கனவு போல் ஒரு வாழ்வு
நமக்கு இங்கே இருந்திடும்

நினைவுகளை மீட்டு
கனவுகளுக்கு உணவூட்டி
மகிழ்ந்திடும் வாழ்வில்
நியங்கள் தோற்றிடும்

சொல்லிச் சென்றவர்
மீண்டு வந்தும் சொல்வார்
சொன்னதை ஒரு நாளும்
சொன்னபடி செய்யாதே

ஏமாற்றம் மட்டும்
நம்மோடு சேர்ந்து வாழும்
விட்டுப் பிரிந்து போக
அதற்கு மனமில்லை போலும்

வழிகாட்டி செல்ல வந்தார்
ஏற்றம் பெற்றிட என்றார்
ஏறிட எண்ணி நடந்தோம்
அவர் மட்டுமே ஏற்றம் கண்டார்

எப்படிச் சொல்லி நோக
எண்ணம் தோற்றதை
வண்ண வண்ணக் கனவுகள்
கண்டிங்கே கொண்டோம் ஆசை

தனித்து நடந்திட வேண்டும்
தாகம் தீர்த்திட நீரை
நாம் தானே குடித்திட வேண்டும்
புரிந்திட பட்டுப்பழுத்தேன்

எனக்குத் தெரிந்த வழியில்
கால்கள் வைத்து நடந்தேன்
ஏற்றம் சொல்ல வந்தார்
பின் செல்ல நான் சென்றேன்.

# ஆண்களின் வலி

✍ விண்ணவன்

ஆண்கள் எப்பொழுது
வலியை மறைக்க
சிரிக்க தொடங்கினார்களோ

அப்பொழுதே
இவ்வுலகும்
சமுதாயமும்

ஆண்களுக்கு
எப்பொழுதும்
வலிக்காது

என்று முடிவு
செய்து விட்டது
ஆனால் ஆண்களுக்கு
மட்டுமே தெரியும்

அந்த சிரிப்புகளிற்கு
பின் எத்தனை
வலிகள் உள்ளதென

இதை அறியாத
இவ்வுலகமோ
ஆண்களை எவ்வளவு
முடியுமோ அவ்வளவு
வேதனைப்படுத்துகிறது

ஆனால் அதற்கு
ஆண்களாகிய
நாங்களோ

பேசுபவர் மனம்
நோகக்கூடாதென
எப்பொழுதும் போல

வலிகளை
தாங்கிக்கொண்டு



சிரித்துவிட்டு
செல்கிறோம்.

# என் பேரழகி



✍ சாகு

சிரிப்பில் சிறகடிக்கும்
ஆற்றல் கொண்ட
புன்னகையரசி

சின்னச் சின்ன
விடயங்களிலும்
முகம் மலர்வாயே

சிறிய கோபத்தில்
கூட பேரின்பம்
காண்பவள் நீ

கண்ணசைவில்
என்னை அடக்கும்
காரிருள் நீ

விடியல் வேளையில்
உன் புன்சிரிப்பில்
வரவேற்பாயே

கண்ணைக்
கவரும் அழகி
நீயே என் பேரழகி.



✍ முல்லை அமுதன்

# கைப்பறவை

கைகளில் வந்தமர்ந்த
பறவை
கனிவுடன் பார்த்தது
எதையோ இழந்ததின்
கனதியான
வலி கண்ணில் தெரிந்ததை
உணர்ந்தேன்

பெயர் வைப்போமா?
மகள் கேட்டாள்
நீயே தெரிவு செய்துகொள்
கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த
பூனை
தலையைத் தூக்கிப்
பார்த்துவிட்டு
மீள கண்ணை மூடிக்கொண்டது

கணினியில் பெயரை
தெரிவு செய்வதில் முனைப்புக்
காட்டினாள் மகள்
என் அணைப்பில் அது எதையோ
உணர்ந்து
சாவகாசமாக
பதற்றம் தணிந்து அமைதி
கொண்டது

மனைவி அதிக ஆர்வம்
கொண்டிருக்கவில்லை
கைகளை விட்டுப்போன
மூத்தவள் ஜனனியை
அணைத்திருந்தது
இப்படித்தான்

கண்கள் கசிய மகளைப்
பார்த்தேன்
பெயரைத் தெரிவு செய்தாயிற்று
கைப்பறவை மகளானாள்.

# பெண்களுக்கு அதிகமாக ஏற்படும் "இரத்தச் சோகை" நோய்





✍ பைஷல் இஸ்மாயில்

**இரத்தச் சோகை என்பது என்ன?**

ஒருவருக்கு இரத்தச் சோகை நோய் ஏற்பட பல்வேறு காரணங்கள் உண்டு. அதில் மிகவும் முக்கியமானது இரும்புச் சத்து குறைவினால் ஏற்படும் இரத்தச் சோகையாகும்.

**இது பெண்களுக்கு ஏன் அதிகமாக ஏற்படுகிறது?**

ஆண்களைவிட பெண்களுக்கே அதிகமாக இந்நோய் ஏற்படும். ஏனெனில், பெண்களுக்கு பல்வேறு நிலைகளில் "இரும்புச்சத்து" அதிகமாக தேவைப்படும். அவர்கள் வளரும் பருவத்தில், பூப்படையும் பருவத்தில், கர்ப்பிணியாய் இருக்கின்ற பருவத்தில், பாலூட்டும் பருவத்தில் என பல்வேறு பருவத்திலும் அவர்களுக்கு இரும்புச்சத்து அதிகமாக தேவைப்படுகிறது.

இவ்வாறு தேவைப்படுகின்றபோது போதுமானளவு இரும்புச்சத்து கிடைக்காவிட்டால் "இரும்புச்சத்து குறைவினால்" இரத்தச் சோகை நோய் ஏற்படுகிறது.

**இமோகுளோபீனின் அளவு என்ன?**

பெண்களுக்கு குறைந்த பட்சம் 14.5 கிராம் சதவிகிதம் அளவிற்காவது "இமோகுளோபீனின்" அளவு இருக்க வேண்டும். பெரும்பாலான, பெண்களுக்கு "இமோகுளோபீனின்" அளவு 10 கிராம் சதவிகிதம் இரும்புச் சத்து அளவிற்கும் குறைவாகவே இருக்கும்.

**இரத்தச் சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

சிலருக்கு, குடலில் "கொக்கி புழுக்கள், பிற புழுக்கள் (சிஸ்டோ சோமியாஸிஸ்) அதிகமாக இருந்தாலும் இரும்புச்சத்து குறைபாடு காரணமாக இரத்தச் சோகை நோய் ஏற்படும்.

மாதவிடாய் காலத்தில் அதிகப்படியான 'இரத்தப்போக்கு' அதிகமாவதனாலும் 'இரத்தச் சோகை' நோய் ஏற்படும்.

பாலூட்டும் நிலையிலும், போதுமான உணவு உண்ணவில்லை என்றாலும், உணவுச் சத்துக்களின் பற்றாக்குறையினாலும் இரத்தச் சோகை ஏற்படலாம்.

மாதவிடாய் செல்லுகின்ற காலத்தில் பெண்ணிற்கு மாதந்தோறும் இரத்த இழப்பின் அளவு இருக்கும். அதில் 30 மி.கி. அளவு இரும்புச் சத்து வீணாகிவிடும்.

கர்ப்பிணிகளுக்கு, இரத்தப்போக்கு ஏற்படவில்லையென்றபோதும், வளரும் சிசுவிற்கு அதிகமான அளவு இரும்புச் சத்து தேவைப்படுவதால், இவர்களுக்கும் இரத்தச் சோகை ஏற்பட்டு விடும்.

வயதான பெண்களுக்கும், மாதவிடாய் நின்றவர்களுக்கும் குடல் பகுதியில் இரத்தக் கசிவு ஏற்படுவதால் 'இரும்புச் சத்து குறைபாடு' உடைய "இரத்தச் சோகை" நோய் ஏற்படலாம். உடல் வலிக்கு பயன்படுகின்ற பல்வேறு மருந்துகளை எடுப்பதாலும், புற்றுநோயின் பாதிப்பினாலும், இரைப்பை, சிறுகுடல் புண்களினாலும் இவர்களுக்கு இரத்தக் கசிவு ஏற்படலாம்.

**இரும்புச் சத்து தேவையான அளவு என்ன?**

தினமும் சராசரியாக ஒருவருக்கு 2.5 மி.கி. அளவு இரும்புச் சத்து தேவைப்படுகிறது. மாதவிடாய் தோன்றும் காலங்களில் 1 மி.கி. அளவு அதிகமாக இரும்புச்சத்து தேவைப்படும். ஆகவே, மொத்தமாக, இப்பெண்களுக்கு தினமும் 3.5 மி.கி. அளவு இரும்புச்சத்து தேவைப்படும்.

**நோய் அறிகுறிகள் என்ன?**

பெரும்பாலானோருக்கு எவ்வித பிரச்சினைகளும் இல்லாமல் இருக்கும். மருத்துவ பரிசோதனையின்போது இவர்களுக்கு இரத்தச் சோகை இருப்பது தெரியவரும். பலருக்கு பொதுவான பல்வேறு உடல் பிரச்சினைகளும், உபாதைகளும் ஏற்படும். அசதி, உடல் தளர்வு, பலமின்மை, நெஞ்சு பட படப்பு, தலைவலி, மயக்கம், தலைசுற்றல், பார்வை மங்கல், உறக்கமின்மை, நெஞ்சு வலி, கை, கால், விரல்கள் மரத்து போதல், சுவாசமுட்டல் போன்ற அறிகுறிகள் ஏற்படும். தோல் வெளுத்துப் போதல், இதயத் துடிப்பும் இவர்களுக்கு அதிகமாக இருக்கும். காலில் வீக்கம் ஏற்பட்டிருக்கும்.

மேலும், வாயின் ஓரப்பகுதியில் வெடிப்புத் தோன்றி, பாதிக்கப்பட்டு "புண்கள்" போல காட்சியளிக்கும். நாக்குப் பகுதியிலும் புண்கள் தோன்றலாம். வீக்கமும், வலியும் ஏற்படலாம். நகத்தில் வெடிப்புகள் தோன்றியிருக்கும். சிலருக்கு நகம் தட்டையாக இருக்கலாம். வளைந்து, உட்குழிந்தும் காணப்படலாம்.

சிலருக்கு உணவு விழுங்குவதில் கஷ்டமிருக்கும். பலருக்கும் உணவு, சாதாரணமாக சாப்பிடக்கூடிய பிற உணவுகளைவிட, களிமண், மணல், சாம்பல் ஆகியவற்றை சாப்பிடுவது மிகவும் பிடிக்கும்.

சிலர் தக்காளி/ மிகவும் பச்சையாக உள்ள காய்கறிகளை சாப்பிட விரும்புவார்கள். இவ்வாறான நிலை, இரத்தச் சோகை இருக்கின்ற நேரத்தில் அதிகமாக ஏற்படும். சிலருக்கு 'மண்ணீரல்' அதிகமாக வீங்கி விடும். இரத்தச்சோகை அதிகமாக இருக்கும்போது இதய செயலிழப்பும் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

**இந்நோயினை கண்டறியும் பரிசோதனைகள் என்ன?**

இரத்த பரிசோதனையின் மூலம் கண்டறியலாம். அவ்வாறு பார்க்கின்றபோது இவர்களின் "இமோகுளோபீன்" அளவு மிகவும் குறைவாக இருக்கும். சிவப்பணுக்கள் அளவில் சிறியவையாக இருப்பதுடன், வெளிறியும் காணப்படும்.

நீள்வட்ட செல்களும் காணப்படும். சிவப்பணுக்களின் எண்ணிக்கை சிறிது குறைவாக இருக்கலாம். எம்.ஸி.வி. எனப்படும் "மொத்த செல்களின் அளவு" குறைவாக இருக்கும்.

வெள்ளையணுக்கள் எப்போதும் போல சாதாரணமாக காணப்படும். சில வெள்ளையணுக்களில் மையக்கரு பலபிரிவுகளாக பிளவுபட்டிருக்கும்.

இரத்த சிவப்பணுக்களில் படியும் தன்மை (ஈ.எஸ்.ஆர்.) எதிர்பார்த்ததைவிட குறைவாகவே இருக்கும். எலும்பு மஜ்ஜையில் இரும்புச்சத்தின் குறைபாடு காணப்படும். இரத்தத்தில் "இரும்புச்சத்தின்" அளவு மிகவும் குறைவாக இருக்கும். "இரும்புச் சத்து சேரும் தன்மை" அதிகரித்திருக்கும்.

ஆய்வுகூட பரிசோதனைகளின் மூலம் இரும்புச் சத்து குறைபாட்டினால் இரத்தச் சோகை ஏற்பட்டுள்ளது என்பதனை அறிந்துகொள்ளலாம். மேலும் நோயாளி செல்லும் குறி குணங்களிலிருந்தும் வயதை வைத்தும் கண்டுபிடித்து விடலாம்.

குறிப்பாக, இவர்களுக்கு குடலில் இரத்தக் கசிவு ஏற்பட்டுள்ளதா என்ற பரிசோதனை செய்வது அவசியமாகும். மலத்தில் "இரத்தம்" உள்ளதா? என்பதனையும் கண்டறிவது அவசியமாகும். இதற்கென பிரத்தியேக பரிசோதனைகள் உள்ளன. கதிரியக்க சக்தி கொண்ட "குரோமியம்" சேர்க்கப்பட்ட சிவப்பணு செல்களை செலுத்தி, அவை எவ்வளவு குடலின் மூலம் வெளியேறுகின்றன என்பதனை கண்டறியும் பரிசோதனையும் உள்ளது. மல பரிசோதனையில் கிருமிகள், புழுக்களின் முட்டைகள் உள்ளனவா? என்பதனையும் கண்டறிய வேண்டும். "செயற்கை வால்வு" பொருத்தியவர்களுக்கும் இதுபோன்ற இரத்தச் சோகை ஏற்படலாம்.

**இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன?**

பெண்களுக்கு இடைவிடாமல் அடிக்கடி மாதவிடாய் போவதும், அதிகளவில் போவதும் மிகவும் முக்கியமான காரணங்களாகும். அடிக்கடி கர்ப்பிணியாகி, குழந்தை பெறுவதும் ஒரு முக்கியமான காரணமாகும்.

**சிகிச்சைகள் என்ன?**

இரத்தச்சோகை நோயை குணப்படுத்த முன்னர், இந்நோய் என்ன காரணத்தினால் உண்டானது என்பதனை கண்டறிய வேண்டும். அதனை போக்கினாலேயே நோயும் சரியாகிவிடும்.

வயிற்றில் கொக்கி புழுக்களின் பிரச்சினை இருந்தால் அவற்றை அழிப்பதற்கான மருந்துகளை எடுத்துக்கொள்ள வேண்டும். மாதவிடாய் பிரச்சினைக்கு உரிய பரிசோதனைகள் செய்து சிகிச்சை செய்ய வேண்டும். அடிக்கடி கர்ப்பிணியாவதை தவிர்க்க வேண்டும். குடற்புண்கள், கட்டிகள், புற்றுநோய்கள் ஆகியவற்றிற்குரிய சிகிச்சைகளும் அவசியமாகும்.

**இந்நோயின் பாதிப்பிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்வது எவ்வாறு?**

இரும்புச் சத்து நிறைந்த உணவுகளை அதிகமாக எடுக்கவேண்டும். குறிப்பாக பேரிச்சம்பழம், முருங்கை கீரை, பப்பாளிப் பழம், கல்லீரல், இறைச்சி ஆகியவற்றை இவர்கள் அதிகமாக சாப்பிட்டால் இந்நோயிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம். ■

டாக்டர் முத்துச் செல்லக்குமார் MD (Gen) Medi)

# தித்திக்கும் முத்தொள்ளாயிரம்

செந்தமிழ்ச்செல்வர் பாடுமீன் சு.ஸ்ரீகந்தராசா

பண்டைத்தமிழ் இலக்கியங்கள் என்றாலே படிப்பதிலும், படித்ததை எண்ணிக் களிப்பதிலும் ஏற்படும் சுவையே தனியானதுதான். அதிலும் இந்த முத்தொள்ளாயிரம் பாடல்கள் எல்லாமே முத்துக்கள்தான். அவை தரும் இன்பமும், சுவையும் வித்தியாசமானவை. எனவே “நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” என்பது போல, முத்தொள்ளாயிரத்தில் உள்ள பாடல்களில் சிலவற்றைத் தெரிவுசெய்து அவை தருகின்ற இலக்கிய நயத்தை, இன்பரசத்தை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ளும் விருப்பத்தின் விளைவே இந்தக் கட்டுரைத் தொடர்!

முதலில் முத்தொள்ளாயிரம் என்ற நூலைப் பற்றிய தகவல்களைப் பார்க்கலாம். இந்நூலில் அடங்கியுள்ள பாடல்கள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஆக்கப்பட்டவை என்பது அறிஞர்களது கருத்தாகும். வடமொழிச் சொற்களின் கலப்பின்றி, தூய தமிழில் இந்தப் பாடல்கள் அமைந்திருப்பது அக்கருத்தை வலியுறுத்துவதாக உள்ளது. முத்தொள்ளாயிரம் என்றால் மூன்று தொள்ளாயிரம் பாடல்கள் என்பது பொருள். அதாவது தொள்ளாயிரம் தொள்ளாயிரமாக மூன்று தொள்ளாயிரம் சேர்ந்து மொத்தமாக இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களைக் கொண்டதாக இந்நூல் ஆக்கப்பட்டிருக்கிறது.



சேரன், சோழன், பாண்டியன் என்னும் முடியுடை மூவேந்தர்களைப் பற்றி, ஒவ்வொருவருக்கும் தொள்ளாயிரம் பாடல்கள் இந்நூலில் இடம் பெற்று இருந்திருக்கின்றன.

ஆனால், காலவெள்ளத்தில் அழிந்தவை போக இப்போது சேரனைப் பற்றிய 21 பாடல்களும், சோழனைப் பற்றிய 30 பாடல்களும், பாண்டியனைப்பற்றிய 59 பாடல்களுமாக மொத்தம் 110 பாடல்களே கிடைக்கப்பெறுகின்றன. இந்த 110 பாடல்களுமே இலக்கிய ஆர்வலர்களுக்கு வியத்தகு இன்பத்தைக் கொடுக்கின்றனவென்றால் 2700 பாடல்களும் எத்தகையனவாக இருந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே அவற்றின் இழப்பை எண்ணி நெஞ்சம் தவிக்கின்றது. இந்த நூலிலே இன்னும் ஒரு கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இதில் அடங்கும் பாடல்களைப் பாடிய புலவர் யார் என்பது தெரியாமைதான். இந்நூலில் அடங்கியிருந்த பாடல்கள் முழுவதையும் ஒருவரே பாடினாரா அல்லது பல புலவர்கள் பாடினார்களா என்ற விபரங்களும் தெரியவில்லை.

காதலையும், வீரத்தையும் தம்வாழ்வியல் நெறியாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் நமது பண்டைத் தமிழ் மக்கள். அவர்களின் வாழ்க்கையினைப் படம் பிடித்துக் காட்டுகிறது முத்தொள்ளாயிரம். சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர்களின் வீரத்தை, போர்த் திறனை, படைச்சிறப்பை, பொதுமக்கள் அவர்களின்மேல் வைத்திருந்த பாசத்தை எல்லாம் உன்னதமான உவமைகளோடு முத்தொள்ளாயிரத்தின் பாடல்கள் நம் கண்களின் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன.

காதல் வயப்பட்ட கன்னியரின் உள்ளத்து உணர்வுகளை, உணர்வுகளின் விளைவுகளை, அந்த விளைவுகளால் ஏற்படுகின்ற இன்பங்களை, இடையில் வரும் துன்பங்களை எல்லாம் தெள்ளத் தெளிவாக நம் சிந்தையிலே பதித்துவிடுகின்ற பாடல்கள் இலக்கியச்சுவையின் இமயத்தையே தொட்டு நிற்கின்றன.

அத்தகைய பாடல்களில் சிலவற்றின் சுவையினை இனி அனுபவிப்போம்.

காதல் என்பது ஓர் அற்புதமான உணர்ச்சி. காதல் இல்லாமல் வாழ்க்கை இல்லை. காதல் இல்லாமல் உலகம் இல்லை. உலகில் உயிரினம் தோன்றியபோதே காதலும் தோன்றியது என்று சொல்வார்கள். காதல் உண்டானதால்தான் உயிரினமே தோன்றியது என்றுகூடச் சொல்லப்படுகிறது. அந்தக் காதலைப் பற்றி கோடானகோடி இலக்கியங்கள் உள்ளன. தமிழ்மொழியில் காதலைக்கூறும் அகத்திணை இலக்கியங்களை அளவிடவே இயலாது. அவற்றின் சிறப்பை முழுமையாக எடுத்துரைக்க முடியாது. காதலைப் பாடாத கவிஞர்களே இல்லை. அண்மைக்காலங்களில் கவிதைகளாகவும், இசைப்பாடல்களாகவும், திரையிசைப் பாடல்களாகவும் பல்லாயிரம், பல்லாயிரம் பாடல்கள் எழுந்துகொண்டிருக்கின்றன. நம் செவிகளிலே விழுந்துகொண்டிருக்கின்றன. இசை இன்பத்தைச் சொரிந்து கொண்டிருக்கின்றன.

நமது ஊனோடும், உயிரோடும் கலந்தது காதல். உணர்வோடு மலர்வது காதல். அந்தக் காதலில் வீழ்ந்து வாழ்வை அனுபவித்தவர்களில் பலர் தம் காதல் வாழ்வின் பெறுபெறாகக் கிடைத்த தமது குழந்தைகள் காதலிப்பதை விரும்புவதில்லை. தமது பிள்ளைகள் பெரியவர்களாகி இளமைப் பருவத்தை அடையும்போது அவர்கள் காதலில் வீழ்ந்துவிடக்கூடாதே என்று நினைப்பது பொதுவாக எல்லாச் சமூகங்களிலும் இருக்கின்றது. எல்லாக் காலங்களிலும் நிகழ்கின்றது. பண்டைக்காலத்திலும் இந்த நிலை காணப்பட்டமைக்குப் பல்வேறு இலக்கியச் சான்றுகள் உள்ளன. முத்தொள்ளாயிரத்திலும் சில பாடல்கள் இந்த நிலைமையை எடுத்துக்காட்டுகின்றன.

பண்டைத் தமிழகத்தில் காதலுக்குத் தடை இருக்கவில்லை. ஆனால் ஒரு கட்டுப்பாடு இருந்திருக்கின்றது.

காதல் நோயும் கண்டிக்கும் தாயும்

சேர நாட்டை ஆளும் மன்னன் கோதை மிக நல்லவன். வீரத்தில் வல்லவன். பேரழகன். அவன் வீதியிலே பவனிவரும்போது அவனைக் காணவும், அவனது அழகை இரசிக்கவும், இளம் பெண்கள் தத்தம் வீடுகளிலேயிருந்து வெளியே வருவார்கள். அப்படி வருகின்ற சமயத்திலே, மன்னன் மீது தன் பிள்ளை காதல் கொண்டுவிட்டால், நிறைவேறாமல் போய்விடக்கூடிய அந்தக் காதலால் தன் மகளின் வாழ்வு பாழாகிப் போய்விடுமே என்ற அச்சத்தால் மன்னனைப் பார்க்க விடாது தாய் தடுப்பாள். இது இளம்பெண்கள் இருக்கும் இல்லங்களில் சாதாரணமாக நடைபெறுவது வழக்கம். இதுபற்றி முத்தொள்ளாயிரத்தில் பல பாடல்கள் உள்ளன. அவற்றில் ஒரு பாடல் வருமாறு.

**தாயர் அடைப்ப மகளிர் திறந்திட**
**தேயத் திரிந்த குடுமியவே - ஆய் மலர்**
**வண்டுலாஅம் கண்ணி வயமான்தேர்க் கோதையைக்**
**கண்டுலாஅம் வீதிக் கதவு (பாடல்இல: 10)**

இதன் கருத்து என்னவென்று பார்ப்போம். வண்டுகள் மொய்க்கின்ற மலர்மாலைகளை அணிந்துகொண்டு சேரமன்னன் தேர்மீது அமர்ந்து தெருவிலே பவனி வருகின்றான். அவனைக் காணும் ஆர்வத்தில் இளம்பெண்கள் தங்கள் வீடுகளின் உள்ளேயிருந்து வெளிப்பட்டு வாசலுக்கு வர முயல்கிறார்கள். தம்பிள்ளைகள் மன்னனைக் கண்டால் மன்னன்மேல் காதல் கொண்டு விடுவார்களே என்று கவலைப்பட்ட அவர்களின் தாய்மார், வெளிக்கதவைப் பூட்டிவிடுகின்றார்கள். தாய் கதவிற்குத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு அப்பால் சென்றதும், மகள் மீண்டும் கதவைத் திறக்க முற்படுகின்றாள். அதைக் கண்ட தாய் ஓடிவந்து மறுபடியும் கதவை நன்றாகப் பூட்டிவிடுகின்றாள். மகள் திரும்பவும் திறக்கின்றாள். தாய் பூட்டுகின்றாள். மகள் திறக்கின்றாள். இப்படியாக இளம் பெண்களும், அவர்களின் தாய்மாரும், கதவுகளைத் திறப்பதும், பூட்டுவதுமாக இருந்ததால் கதவின் பூட்டில் உள்ள குமிழ்கள் தேய்ந்து போகின்றன. இதுதான் பாடலின் பொருள்.

காலத்தால் பழையதாகி, பயன்பாட்டால் பழுதாகி கதவின் பூட்டுக் குமிழ்கள் தேய்வது வழமை. இங்கோ காதலால் குமிழ்கள் தேய்வதாகச் சொல்லப்பட்டிருப்பது எவ்வளவு அருமை!

காதல் வயப்பட்ட கன்னி ஒருத்திக்கும் அவளது தாய்க்கும் நடக்கும் போராட்டத்தை இன்னும் ஒரு பாடல் மிகவும் சுவையாகச் சித்தரிக்கின்றது. அவள் ஓர் அழகிய மங்கை. இளமையும் அழகும் நிறந்தவனும் சிறந்த வீரனுமான சேரமன்னனிடம் அவள் தன் மனதைப் பறிகொடுத்து விட்டாள். இந்த விடயத்தை அறிந்துகொண்ட அவளின் தாயோ மகளின் காதலை எதிர்க்கிறாள். மன்னனைத் தன் மகள் ஒருபோதும் பார்க்கக் கூடாது என்று, எப்போதும் அவளை வீட்டுக்குள் வைத்துப் போட்டிவிடுகிறாள். ஆனால், இந்தக் காதல் விடயம் ஊர்முழுவதும் தெரியவருகிறது. அதை நன்கு அறிந்துகொண்ட மகள், எப்படியும் தன் காதலைப்பற்றி ஊர்மக்களில் யாராவது மன்னனிடம் எடுத்துரைப்பார்கள் என்று தனது தோழியிடம் சொல்லி நம்பிக்கையோடு இருக்கிறாள்.

**கடல்தானைக் கோதையைக் காண்கொடாள் வீணில்**
**அடைத்தாள் தனிக்கதவம் அன்னை அடைக்குமேல்**
**ஆயிழையாய் என்னை அவன்மேல் எடுத்துரைப்பார்**
**வாயும் அடைக்குமோ தான் (பாடல் இல: 14)**

“கடல் போன்ற மிகப்பெரிய படையினைக் கொண்ட மன்னனைப் பார்க்கவிடாமல் என்னைத் தடுத்து ஒரேயொரு வெளிக்கதவையும் மூடிவிடுகிறாள் எனது தாய். ஆனால், அழகிய நகைகளை அணிந்துள்ள என் தோழியே! அந்த மன்னன் மேல் நான் காதல் கொண்ட விடயம் ஊர்மக்கள் எல்லோருக்குமே தெரியும். அவர்கள் மன்னனிடம் சென்று என் காதலைப்பற்றிச் சொல்வார்கள். அதைத் தடுக்க அவளால் முடியுமா?” என்று தோழியிடம் கேட்பதுபோல இந்தப் பாடல் அமைந்துள்ளது. வீட்டுக்குள் என்னைப் பூட்டி வைத்து, வெளிக்கதவை அடைத்து விடத்தான் முடியும். ஊர்வாயை அடைக்க உன்னால் முடியுமா? என்காதல் மன்னனிடம் சென்று சேர்வதைத் தடுக்க உன்னால் முடியுமா? என்று தாய்க்கு விடுக்கப்படுகின்ற கேள்விக் கணைதான் இது. இந்தக்கேள்வி அரசன்மேல் அவள் வைத்துள்ள காதலின் ஆழத்தை நன்கு உணர்த்துகின்றது.

(தொடரும்...)

காலையில் வழக்கம் போல அலாரம் அடிக்கவும் துடித்துப் பதைத்து எழுந்து வேலைக் குத் தயாரானாள் பார்கவி. இரவும் உணவு உண்ணாதது வயிறு தன் வேலையைக் காட்ட, அவசரமாக குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து பார்த்தாள்.

தோசை மா நான் இருக்கிறேன் என்று முகத்தைக் காட்ட மூன்று தோசைகளை வார்த்து ஹொட்சப் போடு உண்டாள். மதியத்திற்குச் சமையல் செய்யும் வலுவோ அவள் மனதில் இல்லை. அதனால் அதைப் பற்றிய சிந்தனையின்றி வேலைக்குப் புறப்பட்டுச் சென்றாள்.

வேலை இடத்தை அடைந்ததும் உரிய இடத்தில் தனது வண்டியைத் தரித்தாள். உள்ளே சென்றதும் வழமையான காலை வணக்கங்களை ஏற்றுப் பதில் வணக்கங்களை கூறிக் கொண்டே தன்னிருக்கைக்குச் சென்று அமர்ந்தாள்.

# ஹாய் செல்லம்

யாழ் சத்யா

தொடர்கதை

03

அவள் பணி புரிவது ஒரு ஆடை அகத்தில்தான். அந்நகரில் பல தசாப்தங்களாக வேரூன்றி இருந்த ஒரு கடை அது. இருந்தாலும் இப்போது வயதான முதலாளியால் சரியான கவனம் எடுக்க முடியாமல் வியாபாரம் படுத்து விட்டது. மூன்று மாடிகளிலிருந்த அந்தக் கடையில் பழைய வாடிக்கையாளர்கள் முதலாளி மேலிருந்த நம்பிக்கையில் தொடர்ந்து வந்து கொண்டிருந்தாலும் பெரிதாக லாபம் காண முடியவில்லை. வரவுக்கும் செலவுக்கும் கணக்குச் சரியாக இருந்தது. அந்தளவு கூட பார்கவியின் ஈடுபாட்டினால்தான் வந்தது எனலாம்.

பார்கவி இங்கு வேலையில் சேர்ந்து நான்கு வருடங்கள் ஆகிவிட்டன. முதலாளி வரதர் ஐயாவை இவள் சூப்பர் மார்கெட்டில் வேலை செய்யும் போது கண்டுதான் பழக்கமாகியது. அவள் அங்கு வேலையை விட்டு ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டியபோது தற்செயலாகச் சந்தித்த வரதர் ஐயா அவள் உயிரைக் காப்பாற்றி புதுவாழ்க்கைக்கு வழி காட்டினார்.

அன்றிலிருந்து கடையையே தன் முழு நேரச் சிந்தனையாகக் கொண்டு வாழ்ந்து வருகிறாள். அவளின் பொறுப்பு கடையை மேற்பார்வையிடுவது தான். ஆடைகளை உரிய விதத்தில் பிரித்து அடுக்குவதும் விற்பனையாளர்களை உரிய முறையில் வழிப்படுத்துவதும் நாள் இறுதியில் காசாளர் முடிக்கும் கணக்கைச் சரி பார்ப்பதுமாக அவள் பொழுது காலில் சக்கரம் கட்டியதாகவே பறந்து போய் விடும்.

இப்போதெல்லாம் மதிய உணவு இவளே சமைத்துக் கொண்டு வருவாள். வரதர் ஐயாவின் மனைவி இருக்கும் வரை இவளுக்கும் சேர்த்தே அவர் உணவு கொடுத்து விடுவார். மகளைப் போலவே எண்ணி இவளில் மிகுந்த வாஞ்சை உடையவர். அவர் இறந்த சில மாதங்களாக வரதர் ஐயாவுக்கும் இவளே உணவு சமைத்துக் கொண்டு வருவாள். இன்று அந்த மனோராஜின் சிந்தனையில் ஆழ்ந்து, உணவைப் பற்றி அக்கறையற்று வந்திருந்தாள். மதியம் கடையில் எடுத்துக் கொள்வோம் என்று எண்ணியவளாய் அன்றைக்கு வர வேண்டிய பொருட்களின் கொள்வனவுப் பட்டியலை எடுத்துச் சரி பார்க்க ஆரம்பித்தாள்.

ஆனால், மனமோ வேலையில் ஒன்றுவதற்கு முரண் பிடித்தது. காரணம் வரதர் ஐயா கடையை இன்னொருவருக்கு விற்கப் போவதாக முடிவெடுத்ததுதான். கடை கைமாறுகிறது என்ற செய்தியைக் கேட்டதும் பார்கவிக்கு ஒரு கணம் திக்கென்றது. வரதர் ஐயா இருந்தவரைக்கும் இந்த நான்கு வருடங்களாக எவ்விதப் பிரச்சினையும் இன்றி காலத்தை ஓட்டி விட்டாள். தன்னுடைய சொந்தக் கடையாகவே எண்ணி நடத்திக் கொண்டிருந்தாள். ஆனால் இனி புதிய உரிமையாளர்கள் எப்படியிருப்பார்களோ? வரதர் ஐயாக்கு ஒரேயொரு மகள் தான். ஆனால் மகளுக்குத் திருமணம் முடித்துக் கொடுத்தது கனடாவில். மகள் காதல் என்று வந்து நிற்கவும் மகள் மீது உயிரையே வைத்திருந்த பெற்றோரால் மறுக்க முடியவில்லை. சந்தோசமாகவே திருமணத்தைச் செய்து வைத்தார்கள்.

மகளும் பெற்றோரைத் தங்களோடு வந்திருக்கச் சொல்லி எவ்வளவோ கேட்டுப் பார்த்து விட்டார். பேரப் பிள்ளைகள் மூவரும் பிறக்கும் போது வரதர் ஐயாவின் மனைவி அங்கு போய் சில பல மாதங்களாகத் தங்கி மகளுக்கு உதவி செய்து விட்டு வருவார். வரதர் ஐயா இங்கு கடையை அம்போ என்று போட்டு விட்டுப் போக முடியாமல் வருடத்துக்கு ஒரு தடவை இரண்டு மூன்று கிழமைகள் கனடா சென்று மகள் குடும்பத்தோடு தங்கி விட்டு வருவார்.

கடையை விற்று விட்டு கனடாவிலேயே வந்து தங்குமாறு மகள் கேட்டும் மகளுக்குப் பாரமாகப் போய்த் தங்க இவர் மனது இடங் கொடுக்கவில்லை. அதைவிட பரம்பரையாக வளர்த்த தொழிலை யாருக்கோ விற்று விட்டுப் போகவும் பிடிக்கவில்லை.

வயது மூப்படைந்திருந்தாலும் இத்தனை வருடங்களாக பார்கவியின் உதவியோடு கடையைச் சமாளித்தார். ஆனால் அவருக்கு இப்போது கடைப் பொறுப்பு பெரிய பாரமாக இருந்தது. வயதின் மூப்பும் இத்தனை வருடங்களாகத் துணையாக இருந்த மனைவியின் இழப்புத் தந்த வலியையும் அந்த முதியவரால் தாங்க முடியவில்லை.

இனிமேல் வாழப் போகும் சில வருடங்களை மகளோடு கழிக்கவென முடிவெடுத்தார். மகள் இங்கே வந்து வியாபாரத்தைக் கவனிக்கப் போவதும் இல்லை. இவர்தான் அங்கே சென்று வாழ வேண்டும். கடையை வாடகைக்கு விட்டு இவர் காலத்துக்குப் பிறகு யார் பராமரிப்பது என்பது போன்ற கேள்விகள் எழ, கடையை முழுவதுமாக விற்பதுதான் தகுந்த தீர்வென எண்ணினார். அவரின் முடிவு அவருக்கே வலியைத் தந்தாலும் இதுதான் வாழ்க்கையின் நியதி எனும் போது அவரும்தான் என்ன செய்வது? வரும் போது எதைக் கொண்டு வந்தோம்.. போகும் போது எதைக் கொண்டு போகப் போகிறோம் என்ற மனநிலைக்கு வந்து விட்டார். பாவம்! அவரையும் குறை சொல்ல முடியாது.

ஆனால் பார்கவியின் நிலை? வரதர் ஐயா இந்த நொடி வரை சொந்த மகளாகவே அவளைப் பார்த்துக் கொண்டார். அவள் முடிவுகளுக்கு என்றும் மறுப்புச் சொன்னதில்லை. நட்டத்தில் போக ஆரம்பித்த கடை இவளின் வரவின் பின்னர்தான் கையைக் கடிக்காமல் ஓடத் தொடங்கியது. அதிலேயே இவள் மீது நல்ல நம்பிக்கை அவருக்கு. மனைவி இறந்த இந்தச் சில மாதங்களில் அவர் கடைப் பக்கம் எட்டிப் பார்ப்பதுகூட இல்லை. பார்கவிதான் முழு வேலையையும் பொறுப்பாகச் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அனைத்துக்கும் இப்போது முடிவு காலம் வந்து விட்டது போலவே என்று எண்ணித் தவித்தாள்.

இந்தக் கடையை மேலும்



நல்லபடியாக நடத்திப் பல மடங்கு லாபம் காணப் பல்வேறு வழிமுறைகள் அவள் மூளையெங்கும் பரவிக் கிடந்தன. ஆனால், அவற்றைச் செயற்படுத்தும் அளவுக்கு வரதர் ஐயாவுக்கு ஆர்வம் எழவில்லை. இப்போது அவையெல்லாம் வெறும் கனவுகளாகவே போய் விடுமோ? என்றுகூட அவள் மனம் கவலை கொண்டது.

இவள் வேலை நிலைக்குமா? என்பதே முதலில் ஐயம்... அப்படி நிலைத்தாலும் தனியாக வாழும் பெண்ணவளை மதித்து நடக்கக் கூடியவராக வேறு இருக்க வேண்டுமே. கடையை விற்கப் போவது யாரோ இளைஞனுக்கு என்றுகூட ஒரு பேச்சு அடிபட்டு இவள் வயிற்றில் புளியைக் கரைத்துக்கொண்டிருந்தது. பெற்றவர்களோடு வாழும் பெண்களுக்கும், கட்டிய கணவனோடு வாழும் பெண்களுக்குமேகூட வேலையிடங்களில் பாதுகாப்பற்ற நேரத்தில் அநாதையான இவளின் நிலை என்னாகுமோ?

வாழ்க்கையே வெறுத்துப் போய் சாகத் துணிந்தவளை வாழ வைத்தது உண்மையில் இந்தக் கடை தான். கறுத்துப் போன அவள் வாழ்வை வண்ணமயமான இந்த ஆடைகள் வேறொரு உலகத்துக்கு அழைத்துச் சென்றன. எப்போதும் வாடிக்கையாளர்களினதும் விற்பனையாளர்களினதும் பேச்சுச் சத்தத்தால் கலகலத்துக் கொண்டிருக்கும் அந்த இடம், அவளது சொந்தப் பிரச்சினைகளை எண்ணிக் கொண்டிருக்க விட்டதில்லை.

இப்போதுகூட அவளை மேலும் சிந்திக்க விடாமல் வரதர் ஐயாவின் குரல் தடுத்தது. "நீ என்ன யோசனையில இருக்கிறாய் என்று தெரியும் கவிம்மா... என்ர நண்பனிட மகன் தானம்மா கடையை வாங்கியிருக்கிறான். அதனால் நீ ஒண்டுக்கும் பயப்பிடத் தேவையில்லை. நல்ல பொடியன்தான். பயப்பிடாதை கவிம்மா...

நீ எப்பவுமே கடையை நல்லா நடத்துறதுக்கு ஆயிரம் யோசனை சொல்லுறாய். ஆனா அதையெல்லாம் உற்சாகமாகச் செய்ய உடம்பில பலமும் இல்லை மனசில தெம்பும் இல்லை. புது முதலாளி எல்லாத்தையும் செய்வானம்மா.. பழைய வேலையாட்கள் யாரையும் வேலையை விட்டு நிப்பாட்டக் கூடாது என்று அவனிட்ட சொல்லிட்டனம்மா. அதனால நீங்க எல்லாரும் ஒண்டுக்கும் பயப்பிடாமல் முந்தி மாதிரியே தொடர்ந்து வேலை செய்யலாம்.

கடையை பூட்டிட்டு கொஞ்சம் திருத்தம் செய்து திரும்பத் திறக்கலாம் என்று விருப்பப்படுகிறான். நானும் சரி சொல்லிட்டேன். உன்னைப் பத்தி அவனிட்ட வடிவா சொல்லியிருக்கிறன் கவிம்மா... உன்ர ஐடியாஸ் எல்லாம் அவனுக்கு வேணுமாம். நீதான் கூட இருந்து அவனுக்கு உதவி செய்யணும்மா...

கைமாத்தல் வேலை எல்லாம் ஓரளவு முடிஞ்சுது. நான் வாற கிழமை கனடாக்கு வெளிக்கிடுறன். இண்டைக்கு மனோ கடையையும் உன்னையும் சந்திக்க வாறன் என்று சொன்னவன். உன்னோட கலந்து பேசி எப்ப கடையை மூடித் திருத்த வேலை தொடங்கலாம் எல்லாமோ உன்னோட கதைச்சு பேசி முடிவெடுக்கிற என்று சொன்னான். ஆயுசு நூறு மனோ உனக்கு.. இங்க பார் கவிம்மா அவனே வந்திட்டான்.."

பார்கவிக்குச் சற்றும் அவகாசம் கொடுக்காமல் வரதர் ஐயா பேசி முடிக்கவுமே அந்த மனோ வந்து நின்றான். "ஹாய் செல்லம்...! நீதானா அந்த கவிம்மா... அங்கிள் கவி கவி... என்று வாய் ஓயாமல் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் அந்தக் கவிதான் பார்கவி என்று தெரியாமல் போச்சே எனக்கு... வாட் எ சர்ப்ரைஸ் பேபி..." வந்து நின்ற மனோ ராஜை அதிர்ச்சியோடும் வெறுப்போடும் பார்த்துக் கொண்டு நின்றாள் பார்கவி.

அவள் ஒன்று நினைக்க விதி ஒன்று நினைக்க வருங்காலம் என்னாகுமோ? **(தொடரும்...)**

# சர்வதேச ரீதியில் சாதனை...

(04 ஆம் பக்கத்தொடர்ச்சி)

MTM younger achievers விருது விழாவில் 15 வயது மதிக்கத்தக்க யெனிலி பினாரா இச்சாதனையை நிகழ்த்தினாள். அதேபோல் திருமதி உலக அழகிப் போட்டியில் இலங்கைப் பெண்ணான கெரோலின் ஜூலி தேர்வு செய்யப்பட்டார்.

அவ்வாறே 2020 ஆம் ஆண்டுக்கான திருமணமான உலக அழகி கிரீடத்தை சம்மந்திக்கா குமாரசிங்க "ஆசியாவின் திருமதி அழகி" பட்டத்தை வென்றார். 2019 ஆண்டில் முதல் ஐந்து அழகி பட்டங்களை வென்று கறுப்பினப் பெண்கள் சாதனை படைத்துள்ளனர்.

அறிவியலில் சாதனை படைத்த ஏழு இந்தியப் பெண் விஞ்ஞானிகள் பெண்ணினத்தின் வரலாற்றை மாற்றி அமைத்துள்ளார்கள். அறிவியலில் எட்ட சாத்தியம் இல்லாதவைகளாக கருதப்பட்ட உச்சத்தையும் பெண்கள் எட்டியுள்ளனர். நோபல் பரிசு வென்றது முதல் நாசாவிற்கு செல்வது வரையிலும் தங்களது பெயர்களை தடம் பெறச் செய்துள்ளனர். ஆணாதிக்கத்துக்கு மத்தியிலும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பிரிவுகளில் சாதனையும் படைத்துள்ளனர். ரிது கரிதால், சந்திரிமா சாஹா போன்றோர் இஸ்ரோ, INSA நிறுவனங்களில் உயர் பதவி வகித்து புதிய திட்டங்களை செயற்படுத்தி சாதனை படைத்தும் வருகின்றனர். அந்த வகையில் உலகில் ஏவுகணைப் பெண் என அழைக்கப்பட்டு அக்னி - 4 ஏவுகணைத் திட்ட இயக்குநராக கடமையாற்றும் 56 வயதான டெசி தாமஸ் என்பவர் "ஏவுகணை முனைவர்" பட்டம் பெற்றுள்ளார்.

இந்தியாவின் ரொக்கெட் பெண்மணி என அழைக்கப்பட்ட சந்திராயன்-2 திட்டத்தின் வெற்றிக்கு மிகப் பெரிய பங்களிப்பு வகித்தவராக ரிது அரிதால் என்ற இந்தியப் பெண் விஞ்ஞானி "மங்கள்யான்" திட்ட உதவி இயக்குநராகப் பணியாற்றி தலைசிறந்த விஞ்ஞானி விருது பெற்றவராவார். அதேபோல் சந்திராயன்-2 திட்டத்தின் இயக்குநராக கடமையாற்றி 2006 ஆம் ஆண்டில் சிறந்த பெண் விஞ்ஞானி விருதைப் பெற்றவராக முத்தையா வனிதா சாதனை படைத்துள்ளார். குழந்தைகளை தாக்கும் வைரஸ் நோய்க்கிருமிகளை அழிப்பது பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட முதல் விஞ்ஞானி என்ற சாதனையை பெற்றவராக சுகன்தீப் காங் என்பவர் பெண்களின் சாதனை வரலாற்றில் இடம் பிடித்துள்ளார். அதேபோல், அந்தாண்டிக்காவில் உறை பனிச் சூழலில் 403 நாட்கள் செலவிட்டு உறை பனியில் அதிக நாட்கள் தங்கிய முதல் பெண் விஞ்ஞானி என்ற பெருமையை 56 வயதான மங்களாமணி என்பவர் பெற்றுள்ளார். இவர் இப்பணிக்கு தெரிவு செய்யப்பட முன் இத்தகைய பனிச் சூழலுக்கு பரீட்சயம் இல்லாதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புளூட்டோவை ஆய்வு செய்ய நாசா அனுப்பிய நியூ ஹாரிசன் என்கின்ற விண்கலத்தில் இருந்து தகவல் சேகரிப்புக்கான சிப் மற்றும் அல்காரிதம் உருவாக்கும் பொறுப்பை மேற்கொண்ட பெண் விஞ்ஞானியாக காமாட்சி சிவராம கிருஷ்ணன் வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். மேலும் இவர் இந்திய தேசிய அறிவியல் அகாடமியில் முதல் பெண் தலைவராக 85 ஆண்டுகளுக்கு பின் தெரிவு செய்யப்பட்ட முதல் பெண் தலைவராக வரலாற்றில் இடம்பிடித்துள்ளார். இவ்வாறு சகல துறைகளிலும் பெண்கள் சர்வதேச ரீதியில் வயது, பால், அந்தஸ்து, பரம்பரை, மதம், குடும்பச் சூழல் என்பவற்றைத் தாண்டி சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.

2023 மார்ச் 08 ஆம் திகதி இலங்கையில் உள்ள பெண்களை வலுவூட்டுவதற்கு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள ஜனாதிபதியின் பங்குபற்றுதலுடன் இந் நிகழ்வு பத்தரமுல்லையில் இடம் பெற்றது. இலங்கைப் பெண்களின் கருணையையும், நேர்த்தியையும் சர்வதேச அளவிலும், தேசிய அளவிலும் சாதனைகளை வெளிப்படுத்திய மூன்று ஒப்பற்ற பெண்களுக்கு விருது வழங்கப்பட்டது. இவ்வுலகிற்கு ஒவ்வொரு பெண்களும், ஒவ்வொரு ஆணின் வளர்ச்சிக்கும், அவனது வெற்றிக்கும் உறுதுணையாக இருக்கிறார்கள். சாதனைப் பெண்கள் ஏனைய பெண்களுக்கு மட்டுமல்ல, ஆண்களுக்கும்கூட சிறந்த முன்மாதிரிகளாகவே உள்ளனர். ஆயிரம் கவிஞர்கள் பெண்ணியம் பேசினாலும், பல்வேறு தடைகளைத் தாண்டியே பெண்கள் சமனிலை பெற வேண்டியிருக்கிறது. உடல், உள, சமூக ரீதியான வன்முறைகளால் பாதிக்கப்படுவதைத் தடுத்து பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்ய உதவும் சட்டங்கள், விதிகள், கொள்கைகள் சர்வதேச செயலொழுங்கில் உயிர் பெற வேண்டும்.

கல்வி, சுகாதாரம் போன்ற துறைகளில் இலங்கைப் பெண்கள் கணிசமான முன்னேற்றங்களை அடைந்துள்ள நிலையிலும், அமைச்சுக்கள், திணைக்களங்கள், அமைப்புக்கள் என பல இயங்குநிலையில் இருந்தும் பெண்களின் உரிமைகள் இன்னும் மறுக்கப்படுவதையும், அவர்களின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தப்பட்டு வருவதையும் காண முடிகிறது. பெண்களின் முன்னேற்றம் நாட்டின் எதிர்காலத்திற்கும், ஜனநாயக சமுதாயத்தை தோற்றுவிப்பதற்கும் அவசியமாகிறது. நாட்டின்வறுமையை முடிவுக்குக்கொண்டு வரும் முயற்சியில் பெண்களின் முன்னேற்றமே பேசும் பொருளாக உள்ளது. கொவிட் தொற்றுநோய், புவிசார் அரசியல் மோதல்கள், காலநிலைப் பேரழிவுகள் மற்றும் பொருளாதாரக் கொந்தளிப்பு ஆகியவற்றின் தாக்கமானது 2020 ஆம் ஆண்டிலிருந்து 75 மில்லியன் மக்களைக் கடுமையான வறுமைக்குள் தள்ளியுள்ளது.

இயந்திரமயான சமுதாயத்தில் பெண்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள அனுபவ அறிவையும் பெற வேண்டும். ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளின் பிறப்பு முதல் பெண்களின் முக்கியத்துவத்தை ஒவ்வொரு பெற்றோரும் தம் பிள்ளைகளிடத்தில் விதைக்க வேண்டும். பெண்களின் பாதுகாப்பு, உரிமை, சுதந்திரம், கௌரவம், அங்கீகாரம் என்பன உறுதி செய்து கொள்வதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதாவது பெண்கள் பாதுகாப்புச் சட்டம், போக்சோ சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் போன்ற சட்டங்கள் பற்றிய விழிப்புணர்வுகளை தாண்டி இச்சமூகத்தில் வாழும் ஒவ்வொரு ஆண்களும் பெண்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து தன்னில் ஒருவராக எப்பொழுது உணர்கின்றார்களோ அன்றுதான் குடும்பத்தில், சமூகத்தில், நாட்டில் பெண்களின் பிரச்சினைகள் நீங்கி புரட்சிகரப் பெண்களின் மறுமலர்ச்சி உதயமாகும். ■

# தலைமைப் போட்டியால்...

(02 ஆம் பக்கத்தொடர்ச்சி)

இப்பொழுது அவர்கள் அறுவடை செய்கிறார்கள்.

ஏற்கெனவே சம்மந்தன், மாவை சேனாதிராஜா, சிறிதரன் தரப்பின் முதிர்ச்சியற்ற, பொறுப்பற்ற தன்மையினாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்து சிதைந்தது. கிளிநொச்சி உட்பட பல இடங்களில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளை இயங்க விடாமல் அவற்றுக்கு முட்டுக்கை இட்டார் சிறிதரன். இறுதியில் தமிழரசுக் கட்சியே அந்த நிலைக்குள்ளாகியுள்ளது. ஆனாலும் அவர்கள் எதையும் பட்டறிந்து கொள்வதாக இல்லை.

வழக்கு முடிவுகளுக்குப் பிறகு புதிய தெரிவின் மூலம் எல்லாவற்றையும் சீர்செய்து விடலாம் என்று சிறிதரனோ மாவையோ ஏன் அந்தத் தரப்பிலுள்ள ஏனையோரோ கருதலாம். அதொன்றும் அப்படி எளிதானதாக இருக்கப்போவதில்லை.

ஏனென்றால், இது கட்சிக்குள் நிலவுகின்ற வேறுபாடுகளின் பிரச்சினை. அரசியல் நிலைப்பாடு, அணுகுமுறை, ஜனநாயக விழுமியத்தின் மீதான கரிசனை எனப் பல அடிப்படைகளுடன் தொடர்புடையது.

சுமந்திரனோ மென்போக்கைக் கடைப்பிடித்து, ஐக்கிய இலங்கைக்குள் தமிழ்பேசும் மக்களுக்கான அரசியல் தீர்வைப் பற்றிச் சிந்திப்பவர். அதற்கமைய சிங்கள, முஸ்லிம், மலையகத் தரப்புகளோடு உறவுகளை வளர்த்துக் கொண்டிருப்பவர். சர்வதேச சமூகத்துடனும் அவர் கொண்டுள்ள உறவு இந்த அடிப்படையிலானதே. குறிப்பாக, வெளியுலகத்தின் உளநிலையை (அரசியலை) புரிந்து கொண்டு அவற்றோடு உறவை ஏற்படுத்தியிருப்பவர். இதனை தலைவர் தெரிவின் பிறகு ஊடகவியலாளர் சிவராஜாவுக்கு வழங்கிய யுடியுப் நேர்காணலில் சுமந்திரனே தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிறிதரன் இதற்கு மாறாக தீவிர நிலைப்பாட்டைக் கொண்டவர். அவருடைய அரசியல் யுத்தத்துக்கு முந்தியது. 1970 களில் தமிழ்த்தலைவர்கள் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் பிரகடனப் படுத்திய சொல்லரசியல். அதற்கு எந்தச் செயற்பாட்டு வடிவமும் கிடையாது. எந்த அணுகுமுறையும் இல்லை. சமூகத்தை உணர்ச்சிக் கொந்தளிப்பில் வைத்திருக்கும் பேச்சே அதனுடைய அடிப்படை. இதற்கு ஏனைய சமூகங்களோடு ஊடாட வேண்டிய அவசியமில்லை. என்பதால்தான் அவர் தலைவர் தெரிவை அடுத்து கிளிநொச்சிக்குச் சென்று துயிலும் இல்லத்தில் தன்னை வெளிப்படுத்தியது. மட்டுமல்ல, யாப்பு, ஜனநாயக விழுமியம், அரசில் பண்பாடு, புத்தாக்க உணர்வு என எதையும் பொருட்படுத்தாமல் அணிப் பலத்தில் நம்பிக்கை கொண்டிருப்பது.

இந்த வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு அதன் நிமித்தமாகப் பரிகாரம் (மாற்றங்களை) செய்தால்தான் தமிழரசுக் கட்சி மீளுயிர்ப்படையும். இல்லையெனில் அது தன்னுடைய வழியை ஒடுக்கிக் கொள்ளும். அந்த வழியை வரலாற்றுக் காடு மூடிவிடும்.

கடந்த வாரங்களில் இருந்ததைப் போன்று இப்போதைய நிலை இல்லை. கட்சியில் போட்டியற்ற விதமாகத் தெரிவுகளை மேற்கொள்ளும் முடிவொன்று ஏற்படுமானால் ஓரளவுக்குச் சுமுக நிலை ஏற்படும். அப்படியென்றால் மறுபடியும் யார் தலைவர் என்ற கேள்வி எழும். சுமந்திரன் மறுபடியும் தலைமைத்துவத்தைக் கோருவாரா என்று தெரியவில்லை. ஆனால், சிறிதரன் தலைமைக்கான குறியை விட்டு விடப்போவதில்லை.

அவ்வாறே செயலாளர் குறித்த தேர்வும். அவற்றில் எத்தகைய உடன்பாடுகள் எட்டப்படப்போகின்றன என்பது கேள்வியே. குகதாசனும் எளிதில் விட்டுக் கொடுப்பார் என்று எதிர்பார்க்க முடியாது. கட்சியின் நலனைக் குறித்து எல்லோரும் விட்டுக் கொடுப்புகளைச் செய்ய வேண்டும் என்றால் சிறிதரன் - சுமந்திரன் அணிகளுக்கு அப்பாலான ஒரு தலைமையையே தேர்வு செய்ய வேண்டும். அது சாத்தியமாகும் என்று தெரியவில்லை.

ஆகவே வழக்குத் தீர்ப்புக் கிடைத்தாலும் நடைமுறையில் பிரச்சினைக்கு முடிவு கிட்டும் என்று எதிர்பார்க்க முடியாத நிலையயே தொடர்கிறது. ■

# மார்ச் 08 : அனைத்துலக பெண்கள் தினம் .....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அண்மையில் பாரிஸில் நடந்த எனது ஓவியக் கண்காட்சியில் பெண்ணின் 'வலி' யை உணர்த்தும் ஒரு ஓவியத்தை காட்சிப்படுத்தினேன். அந்த இடம் தேவாலயத்தை சார்ந்திருந்தது. அங்கே ஒரு பிரெஞ்சுப் பெண்மணி என் அருகில் வந்து, "நீ மிகவும் தைரியசாலிதான். இங்கு வரும் அதிகமானோர் பெண்களின் கருக்கலைப்பை இன்றும் ஏற்காதவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால், நீ இங்கேயே , இப்படியொரு ஓவியத்தை வரைந்து வைத்துள்ளாய்" என்றார். அவரது கூற்றை என்னால் நம்பமுடியாமல் இருந்தது.

அமெரிக்கா கலிபோர்னியாவில் சிறு பிள்ளைத் திருமணங்கள், வலுக்கட்டாயமாக செய்யப்படுகிறது என்று செய்திகளில் இடம்பிடித்த சம்பந்தப்பட்ட பெண்களின் பதிவுகள் ஈரல்குலையையே நடுங்க வைக்கும் அளவில் இருக்கிறது.

பெண்கள் மீதான வன்கொடுமைகள் ஆங்காங்கே கொடிகட்டிப் பறந்து கொண்டுதான் இருக்கிறது. பாலியல் துஷ்பிரயோகங்களுக்குள்ளாகும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது. உலகெங்குமே வசை பாடுவதில் போட்டி போட்டு தம் வல்லமையைக் காட்டுவார்கள்.

படித்தவர்கள் மத்தியிலும்கூட, பெண் என்பவள் ஆண்களுக்கான தனித்தனி பாத்திரங்களாகவே தாய், சகோதரி, மனைவி என அடுப்படிக்கு, படுக்கைக்கு மாத்திரமேயான 'வார்ப்பு' களாகவே பார்க்கப்படுவதை அவதானிக்கலாம்.

வெளிநாடுகளில் வாழும் எம் இளைஞர்கள் தமக்கு திருமணம் என்றவுடனே ஊரில் இருந்து பெண் எடுக்கவே விரும்புவர். "அது கற்பு'க்கு உத்தரவாதம்" என்பது அவர்களது கருத்து.

தமது சாதிக்குள் பெண் வேண்டும், அதுவும் கற்போடு வேண்டும். திருமணம் முடித்து பெண் இங்கு வந்தால் மணமகனின் நண்பர்கள் சொல்லும் முதல் வார்த்தை, "இனியென்ன உனக்கு காப்புக்கை சாப்பாடு" தான் என்பது.

இதன் ஆழக்கருத்தில் ஆண்களுக்குள் புரையோடிப்போயிருக்கும்,

"பெண்ணானவள் சமையலறைக்கும், படுக்கையறைக்கும் உரியவள்" தானென்கின்ற ஆணாதிக்க பொருளினை நம்மில் படித்த ஆண்கள்கூட உணருவதில்லை.

படித்தால் மட்டும் ஆணாதிக்க மனோபாவம் மறைந்து விடுமா என்ன?

ஐரோப்பாவில் பாசிசத்தை தீரத்துடன் எதிர்த்து பாசிஸ்டுக்களாலேயே சுட்டுக் கொல்லப்பட்ட ரோசா லுக்ஸம்போர்க், இதே பாசிசக் கூறுகளை இனங்கண்டு அதைக் கேள்விக்குட்படுத்தி எழுத்தில் பதிவு செய்தமைக்காக யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியரான ரஜனி திராணகம, பல்கலைக்கழக மாணவி செல்வி போன்றோர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டமையும் பாசிச ஆணாதிக்க வெறியன்றி வேறென்ன?

இந்து சமய தெய்வங்களில் ஏராளமானவை பெண் தெய்வங்கள். ஆனால், கோயில் மூலஸ்தானத்துள் ஆண்கள் மட்டும்தான். அதுவும் பிராமணர் மட்டும்தான் நுழையமுடியும்.

பிராமண பெண்களுக்குக்கூட அனுமதியில்லை. பெண் என்பவள் தீட்டானவள் என புறக்கணிக்கப்படுகிறாள். எனவே வருடந்தோறும் வரும் மார்ச் 08 ஆம் திகதியில் வலிசுமந்து, ஒடுக்குமுறைக்குள்ளாகி உயிர்நீத்த பெண்களையும் பெண் விடுதலையைச் சாத்தியமாக்க பெரும் எழுச்சியுடன் தெருவில் இறங்கிப் போராடியவர்களையும், பெண்களின் போராட்டத்திற்கான சட்ட, தத்துவப் போரை எழுத்தில்-வாதத்தில் நிகழ்த்திய பெண்ணிலை வாதிகளையும் அதன் முழு அர்த்தத்தில் நினைவுகூர்ந்து, பெண் எழுச்சியினை அணைந்து விடாது காத்து, அடுத்த தலைமுறையினருக்கு கைமாற்றும் எமது வரலாற்றுக் கடமையினை சாத்தியப்படுத்த முயற்சிப்போம். ■


கிருபா லேனர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.


அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

# அண்டர்-19 முதல் 100 வரை தனித்துவமான உலக சாதனை

நியூஸிலாந்துக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் நடைபெற்று வரும் இரண்டாவது போட்டி மார்ச் 8 ஆம் திகதி துவங்கியது. அதில் நியூஸிலாந்து கப்டன் டிம் சௌதீ நம்பிக்கை நட்சத்திரம் கேன் வில்லியம்சன் ஆகியோர் தங்களுடைய 100 ஆவது போட்டியில் ஜோடியாக விளையாடினர். சிறுவயதிலிருந்தே ஒன்றாக விளையாடத் துவங்கிய இவர்கள் கடந்த 2008 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற அண்டர்-19 உலகக் கோப்பையில் நியூஸிலாந்துக்காக ஒரே அணியில் விளையாடினர். இருப்பினும் டெஸ்ட் கிரிக்கெட்டில் டிம் சௌதீ 2008, கேன் வில்லியம்சன் 2010 என வெவ்வேறு வருடங்களில் நியூஸிலாந்துக்காக அறிமுகமானார்கள்.

சில வருடங்களில் ஒன்றாக சேர்ந்து விளையாடத் துவங்கிய இவர்கள் குறுகிய காலத்திலேயே நியூஸிலாந்தின் முக்கிய வீரர்களாக உருவெடுத்தனர்.

அதைத் தொடர்ந்து கடந்த 2016 ஆம் ஆண்டு புலவாயோ நகரில் ஜிம்பாப்வேவுக்கு எதிராக கேன் வில்லியம்சன் மற்றும் டிம் சௌதீ ஆகிய இருவருமே தங்களுடைய 50 ஆவது போட்டியை ஒன்றாக சேர்ந்து விளையாடினார்கள். அப்படியே காலங்கள் உருண்டோடிய நிலையில் இன்று ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அந்த இருவரும் தங்களின் 100 ஆவது போட்டியில் ஒன்றாக விளையாடியுள்ளனர். இதன் வாயிலாக 147 வரலாறு கொண்ட டெஸ்ட் கிரிக்கெட்டில் 50 ஆவது போட்டியையும் 100 ஆவது போட்டியையும் ஒன்றாக சேர்ந்து விளையாடிய வீரர்கள் என்ற தனித்துவமான சாதனையை கேன் வில்லியம்சன் மற்றும் டிம் சௌதீ ஆகியோர் படைத்துள்ளது ரசிகர்களுக்கு வியப்பைக் கொடுத்துள்ளது. ■



# விசித்திரமான சாதனைக்கு சொந்தக்காரரான அஸ்வின்




இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் இந்திய அணியின் அனுபவ சுழற்பந்து வீச்சாளருமான ரவிச்சந்திரன் அஸ்வினுக்கு நூறாவது போட்டியாக அமைந்தது. இதன்மூலம் 14 ஆவது இந்திய வீரராக 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடும் வீரராக அஸ்வின் சாதனையை நிகழ்த்தினார்.

இந்தப் போட்டிக்கு முன்னதாக 99 போட்டிகளில் விளையாடிய அஸ்வின் 500-க்கும் மேற்பட்ட விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்த வேளையில் இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெற்று வரும் இந்த ஐந்தாவது போட்டியின் முதல் இன்னிங்ஸிலும் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்திய அவர் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தியிருந்தார்.

ஒருபுறம் இவரது பந்துவீச்சு சாதனைகள் அடுக்கடுக்காக இருந்து வரும் வேளையில் தற்போது நூறாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியதிலும் அவர் புதியதாக ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார். இதுவரை இந்திய அணிக்காக 13 வீரர்கள் 100 டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாடி உள்ளனர். தற்போது 14 ஆவது வீரராக இந்தப் பட்டியலில் இணைந்துள்ள அஸ்வின் இந்திய அணிக்காக அதிக வயதில் அதாவது தனது 37 ஆவது வயதில் டெஸ்ட் கிரிக்கெட்டில் நூறாவது போட்டியில் விளையாடிய வீரர் என்ற விசித்திரமான சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவருக்கு முன்னதாக இந்திய அணிக்காக 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய அனைவருமே 37 வயதிற்குள் நூறாவது போட்டியில் விளையாடியிருந்தனர். ஆனால் அஸ்வின் தான் தற்போது 37 வயதில் நூறாவது டெஸ்ட் போட்டியில் விளையாடியிருக்கிறார்.

தர்மசாலாவில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இங்கிலாந்து, இந்தியா ஆகியவற்றுக்கு இடையிலான ஐந்தாவது டெஸ்ட் போட்டியில் இந்திய சுழற்பந்து வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின், இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர் ஜானி பேர்ஸ்டோவ் ஆகியோர் தமது 100 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடுகின்றனர். ■

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 09.03.2024 அன்று வெளியிடப்பட்டது.